வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu




மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram. money transfer மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 23.07.2024 செவ்வாய்க்கிழமை இதழ் : 205 பக்கங்கள் : 12

## தமிழ் பொது வேட்பாளர் விவகாரம்:

# ஏழு கட்சிகள், சமூக அமைப்புகள் புரிந்துணர்வில் நேற்று கைச்சாத்து

யாழ்ப்பாணம், ஜூலை 23

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளரை நிறுத்துவது தொடர்பான உடன்படிக்கை நேற்று திங்கட்கிழமை கைச்சாத்திடப்பட்டது. ஏழு தமிழ்த் தேசியக் கட்சிகளும் 80இற்கும் மேற்பட்ட பொது அமைப்புகள் மற்றும் தனிநபர்களின் ஒன்றிணைவான தமிழ் மக்கள் பொதுச் சபையும் சமதரப்பினர் என்ற அடிப்படையில் "தமிழ்த் தேசிய பொதுக் கட்டமைப்பு" என்ற பெயரில் இந்த உடன்படிக்கையை எட்டின.

11









## தமிழ்த் தேசிய பொதுக்கட்டமைப்பின் உடன்பாட்டில் 9 அம்சங்கள் வலியுறுத்து

யாழ்ப்பாணம்,ஜூலை 23

7 தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள், தமிழ் மக்கள் பொதுச்சபை ஆகியவை தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பாக நேற்று திங்கட்கிழமை செய்துகொண்ட உடன்பாட்டில் 9 அம்சங்கள் வலியுறுத்தப்பட்டுள்ளன.

அந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில், ஈழத்தமிழ் மக்கள் இலங்கைத் தீவின் வடக்கு - கிழக்கில்

11

## மருந்தகத்தில் மரண சடங்கு; விசாரணையில் அதிகாரிகள்!

யாழ்ப்பாணம், ஜூலை 23

யாழ்ப்பாணத்தில் மருந்தகம் ஒன்றில் ஒருவரின் மரணச் சடங்கு நடத்தப்பட்டது தொடர்பில் சுகாதார அதிகாரிகள் விசாரணையை முன்னெடுத்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

யாழ்ப்பாணத்தில் வீடு ஒன்றில் பதிவு

11

## காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளுக்கு ரூ. 2 இலட்சம்!

### கிளிநொச்சியில் நேற்று பதிவு

கிளிநொச்சி, ஜூலை 23

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களுக்கு 2 இலட்சம் ரூபாய் உதவித் தொகை வழங்கு வதற்கான பதிவு கிளிநொச்சியில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்றது.

11

## இனவாத நோக்கத்திலேயே ஜனாஸாக்கள் எரிக்கப்பட்டன

### சஜித் பிரேமதாஸ மீண்டும் சாடல்

கொழும்பு, ஜூலை 23

கொரோனா காலத்தில் முஸ்லிம்களின் மத உரிமைகளை பறிக்கும் இனவாத நோக்கத்துடன் ஜனாஸாக்களை எரித்தனர் - என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றஞ்சாட்டியுள்ளார்.

கம்பஹாவில் நேற்று நடந்த நிகழ்வு ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

11

## அரசமைப்பின் 22ஆவது திருத்தம் ஜனாதிபதி தேர்தலை பாதிக்கும்!

### ஜீ. எல். பீரிஸ் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 23

அரசமைப்பின் 22 ஆவது திருத்தம் ஜனாதிபதித் தேர்தலை கடுமையாகப் பாதிக்கும் என்று பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ, ஜனாதிபதித்

11

## எரிவாயுவுக்கு சில இடங்களில் தட்டுப்பாடு!

நுவரெலியா,ஜூலை 23

நாட்டின் சில பகுதிகளில் சமையல் எரிவாயுவுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால், பொது மக்கள் பலரும்

11

## நாட்டில் குழப்பம் ஏற்படுத்த அரசாங்கம் முயற்சிக்கிறது!

### சாடுகிறார் உதய கம்மன்பில

கொழும்பு, ஜூலை 23

நாட்டில் குழப்பத்தை தோற்றுவிக்கும் நோக்கிலேயே அரசாங்கம் அரசமைப்பின் 22ஆவது திருத்தச் சட்ட மூலத்தைக் கொண்டு வந்துள்ளது - இவ்வாறு பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில

11

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

காலங்காலமாக பேசப்படும் சர்தார்ஜி நகைச்சுவை ஒன்று இப்போது ஞாபகத்துக்கு வந்தது. சர்தார்ஜி என்று ஒருவரை கற்பனையில் உருவாக்கி ஏராளமான நகைச்சுவை கதைகள் வழக்கத்தில் உள்ளன. சர்தார்ஜி இந்திய சீக்கியர்கள் போல தலைப்பாகை கட்டி, தாடி மீசையுடன் காணப்படுவார்.

ஒருநாள் நம்ம சர்தார்ஜி, சின்னதாக ஒரு ரீவி வாங்க வேண்டும் என்று ஆசைப்பட்டு, எலக்ட்ரோனிக்ஸ் கடைக்கு போயிருப்பார். கடைகாரனை கூப்பிட்டு ஒரு சின்ன ரீவியை காட்டிக் கேட்டார்.

"இந்த ரீவி என்ன விலை?"

கடைக்காரன் சர்தார்ஜியை ஏற இறங்கப் பார்த்துவிட்டு சொன்னார்,

"இந்தக் கடையில சர்தார்ஜிக்கெல்லாம் ரீவி விற்கிறதில்லை..."

எப்படியும் அந்த ரீவியை வாங்கிவிடும் ஆசையில், வீட்டுக்குப் போய் தன்னோட தலைப்பாகை, தாடி மீசையை எடுத்துவிட்டு வந்து கடைகாரனைப் பார்த்துக் கேட்டார்,

"இந்த ரீவி என்ன விலை?"

"இந்த கடையில் சர்தார்ஜிக்கெல்லாம் ரீவி விற்கிறதில்லை..." மறுபடியும் அதையே கடைகாரன் சொல்ல, சர்தார்ஜியால் பொறுக்க முடியவில்லை, கடைக்காரனிடம் பரிதாபமாக கேட்டார்,

"ரீவி குடுக்கலைன்னா பரவாயில்லை, அட்லீஸ்ட், நான் சர்தார்ஜிதான்னு எப்படி கண்டுபிடிச்சே சொல்லு?"

கடைக்காரன் சிரித்துக் கொண்டே சொன்னான், "இது ரீவி இல்லை, மைக்ரோ ஓவன் அதான்".

இது உங்களை சிரிக்க வைப்பதற்காக மாத்திரம் இங்கே தந்திருக்கிறேன். இந்த நகைச்சுவைக்கும் இனி சொல்லப் போவதற்கும் எந்த சம்பந்தமும் இல்லை.

அந்த செய்தியை படித்த போது எதுவும் புரியவில்லை. மீண்டும் படிக்க வேண்டியிருந்தது.

தேர்தல் காலங்களில் பாராளுமன்ற உறுப்பினர்களால் முன்வைக்கப்படும் வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட வேண்டும் என்றும் அதற்காக சட்டம் கொண்டுவரப்பட வேண்டும் எனவும் கோரி கையெழுத்துப் பெறும் வேலைத்திட்டம் ஒன்று சில நாட்களாக வடக்கு மாகாணம் எங்கும் முக்கிய நகரங்களில் மேற்கொள்ளப் பட்டது.

தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் நடந்த இந்தக் கையெழுத்துப் பெறும் போராட்டத்தில் அவர்கள் என்ன கேட்க வருகிறார்கள் என்பதை இலகுவில் புரிந்துகொள்ள முடியவில்லை.

"தேர்தல் காலங்களில் பாராளுமன்ற உறுப்பினர்களால் முன்வைக்கப்படும் வாக்குறுதிகள் வழக்கமாக நிறைவேற்றப்படுவது இல்லை. அவ்வாறான வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கான சட்ட மூலம் ஒன்று பாராளுமன்றத்தில் இயற்றப்படவேண்டும். இவ்வாறு பொய் வாக்குறுதிகள் வழங்கப்படுகின்றமையால் பொதுமக்கள் ஏமாற்றப்படுகிறார்கள்" என்று தெரிவித்துள்ள மீனவர் அமைப்பு, இதற்கான கோரிக்கை அடங்கிய மனுவில் நகரங்கள்தோறும் மக்களிடம் கையெழுத்துப் பெற்று வருகின்றது.

அவர்கள் கோருவது போல ஒரு சட்டம் கொண்டுவரப்பட்டால்,

தமிழர் பிரச்னைக்கு தீர்வாக சமஷ்டியை பெற்றுத்தருவோம் என்று ஒரு பாராளுமன்ற உறுப்பினர் தேர்தல் பிரசாரத்தில் வாக்குறுதி அளித்தால் அதனை நிறைவேற்ற வேண்டும் என்று அந்தச் சட்டம் சொல்லவேண்டும் என்பதாகவே விளங்கிக் கொள்ளமுடிகின்றது.

அவ்வாறெனில், இந்த நாட்டில் எந்தப் பிரச்னையும் இல்லாமல் போய்விடும்தான்.

ஏனெனில், எமது எம். பிக்கள் எவருமே, தாங்கள் எம். பியாக தெரிவுசெய்யப்பட்டால் அதைச்செய்வோம் - இதைச் செய்வோம் என்று சொன்னதில்லை. மாறாக, சர்வதேசத்தின் உதவியுடன் சமஷ்டியை பெற்றுத்தருவோம் என்றே கடந்த ஆறு தசாப்தங்களாக கூறிக்கொண்டிருக்கின்றனர். அதிகம் ஏன், இந்தப் போராட்டத்தை நடத்தும் மீனவர்களின் பிரச்னைகளுக்குக்கூட அவர்கள் தீர்வைப் பெற்றுத்தருவதாகக் கூறியதில்லை.

பாராளுமன்றத் தேர்தல் ஒன்றில் போட்டியிடும் ஒருவர், தான் போட்டியிடுகின்றபோது, தான் வெற்றிபெற்றால் மக்களுக்கு என்ன செய்வேன் என்று சொல்கின்ற எல்லா விடயத்தையும் பின்னர் சட்டம் போட்டு செய்யமுடியாது என்பது தெரிந்ததுதான்.

ஆனால், அவ்வாறு ஒருவர் வாக்காளர்களுக்கு வாக்குறுதி தருகிறார் என்றால், அதனை அவர் எவ்வாறு செய்து தருவார் என்பது குறித்தும் அவரால் அதனை செய்துதரக்கூடியதாக இருக்குமா என்பதையும் வாக்காளர்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

அவ்வாறு அவர் வாக்குறுதி அளிக்கின்றபோது அதனை எப்படி அடைவீர்கள் அல்லது எப்படி பெற்றுத் தருவீர்கள் என்று கேள்வி கேட்கத் தொடங்கினாலே அவர்கள் செய்யமுடியாததை செய்வேன் என்று உறுதி வழங்கப்போவதில்லையே.

அதிகம் என்? ஒருவர் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுகிறார் என்றால், அவர் ஏற்கனவே, பாராளுமன்ற உறுப்பினராக இருந்தவர் என்றால் கடந்த ஐந்து ஆண்டுகளில் நீங்கள் ஒர் எம். பியாக செய்த வற்றை பட்டியலிட்டு அவற்றை வெளியிட்டுவிட்டுத்தான் மீண்டும் வாக்குக்கேட்டு வாருங்கள் என்று நீங்கள் அவர்களின் முகத்துக்கு நேரே சொன்னாலே போதுமே அதற்கு எதற்காக சட்டம்?

அவ்வாறு பட்டியலிட்டு விட்டுத்தான் மீண்டும் கேட்க வேண்டும் என்றாலே எங்கள் எம். பிக்கள் பலர் இனி எந்தக் காலத்திலும் போட்டியிடவே முடியாதே. அதைவிடுத்து, சொன்ன வாக்குறுதியை நிறைவேற்றவேண்டும் என்று சட்டம் கொண்டுவரவேண்டும் என்று கேட்பது, அவர்களைக் காப்பாற்ற உதவுமே தவிர அதனால் நமக்கு எந்தப் பயனும் கிடைக்கப்போவதில்லை.

- ஊர்க்குருவி.

# விமர்சையாக நடந்த சோலைக்குயில் அவைக்காற்று களத்தின் ஆண்டு விழா!

வடமராட்சி, ஜூலை 23

சோலைக்குயில் அவைக்காற்றுக் களத்தின் 36ஆவது ஆண்டு நிறைவு விழா நிகழ்வுகள் ஞாயிற்றுக்கிழமை காலை-09 மணிக்கு பன்னாலை வரத்தலம் கற்பக விநாயகர் ஆலய கல்யாண மண்டபத்தில் வெகுவிமரிசையாக நடைபெற்றது.



சான்றிதழ் வழங்கல், எழுத்தாளர் விருது வழங்கல், பவளவிழா - மணிவிழா கௌரவங்கள், தமிழ் - ஆங்கில நூல்கள் வெளியீடு, சாதித்த மாணவிகளுக்கான பரிசில்கள் என நிகழ்வு முழுவதுமே பஞ்சாமிர்த அரங்க நிகழ்வாக நடைபெற்றது.

விருந்தினர்களை ஆராத்தி எடுத்து, பூக்கொடுத்து வரவேற்றமையைத் தொடர்ந்து மங்கல விளக்கேற்றும் நிகழ்வு நடைபெற்றது. தீர்மானம் எடுத்தல் பயிற்சி நிறைவு செய்தவர்களுக்கான பெயர்களை சோலைக்குயில் அவைக்காற்றுக் களத்தின் தலைவரும் ஆசிரியருமான கோகிலா மகேந்திரன் அவர்கள் வாசிக்க சான்றிதழ்களை பிரதம விருந்தினர் பேராசிரியர் கனகசபை சிவபாலன் வழங்கி வைத்தார்.

தொடர்ந்து கோகிலா மகேந்திரன் எழுதி சாவித்திரி உமாமகேஸ்வரன் மொழிபெயர்த்த "டிக்லைன் அன்ட் றெக்வரி" ( Decline and Recovery) ஆங்கில நூல் தொடர்பான அறிமுக உரையை யாழ். பல்கலைக்கழகத்தின் ஆங்கில மொழி கற்கைகள் பீடத்தின் முன்னாள் தலைவரான கலாநிதி கருணாதேவி சிவாஜி நிகழ்த்தினார்.தொடர்ந்து நூலின் மொழிபெயர்ப்பாளர் சாவித்திரி உமாமகேஸ்வரனுக்கான கௌரவத்தை கலாநிதி கருணாதேவி சிவாஜி, புனிதவதி சண்முகலிங்கன் ஆகியோர் வழங்கினர். ஆங்கில நூலை சாவித்திரி உமாமகேஸ்வரன் வெளியிட முதற்பிரதியினை ஓய்வுநிலை விரிவுரையாளரான இந்திரமதி ராமச்சந்திரா பெற்றுக் கொண்டார்.

நிகழ்வின் இடையிடையே தண்பதப் பெருவழி நூலை எழுதிய சோலைக்குயில்களின் கதைகள் தொடர்பிலான கருப்பொருளை கதையை எழுதியவரே கூற அதற்கான அரங்க செயல்பாடும் பின்னணியில் நடைபெற்றது.

தொடர்ந்து விழிசை சிவம் இலக்கிய விருது வழங்கல் நிகழ்வு நடைபெற்றது. மூத்த எழுத்தாளர் ஐ. சாந்தன், மூத்த ஊடகவியலாளர் இ.பாரதி, எழுத்தாளரும் சமூக செயற்பாட்டாளருமான க. தணிகாசலம் மற்றும் சோலைக்குயில் இசைக்கலைஞர் விருது பெறும் மூத்த ஆசிரியர் விமலாதேவி நாகேஸ்வரன் ஆகியோருக்கான கௌரவங்களையும் விருதுகளையும் பேராசிரியர் கனகசபை சிவபாலன், தெல்லிப்பழை பிரதேச செயலாளர் திருமதி. சிவகெங்கா சுதீஷ்னர், மருத்துவர் சுயமளா சிவமோகன், காவெட்டி விக்கினேஸ்வரா கல்லூரியின் அதிபர் பொன்னையா அரவிந்தன் ஆகியோரும் வழங்கி வைத்தனர்.

பவளவிழா கௌரவம் பெறும் திரு கிருஷ்ணர் மகேந்திரராஜா மற்றும் மணிவிழா கௌரவம் பெறும் திரு ச. கருணாகரன் அவர்களுக்கான கௌரவங்களினை பேராசிரியர் கனகசபை சிவபாலன், பொன்னையா அரவிந்தன் ஆகியோர் வழங்கி வைத்தனர்.

தொடர்ந்து சோலைக்குயில் மாணவ சாதனையாளர்களான செல்வி மதுவந்தி மயூரன், செல்வி கனிமொழி கணேசானந்தன் ஆகியோருக்கான பரிசில்களை பிரதேச செயலாளர் திருமதி சிவகெங்கா சுதீஷ்னர் அவர்கள் வழங்கி வைத்தார். தொடர்ந்து அவரது உரையும் இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து பேராசிரியர் கனகசபை சிவபாலனின் பிரதம விருந்தினர் உரை நடைபெற்றது. சோலைக்குயில்களின் நூலான தண்பதப் பெருவழி நூலினை பேராசிரியர் கனகசபை சிவபாலன் வெளியிட்டு வைக்க முதற்பிரதியை திருமதி வ. மயூரன் தம்பதியர் பெற்றுக் கொண்டனர். தொடர்ந்து நூல் அறிமுக உரையை ராஜி கெங்காதரன் நிகழ்த்தினார்.

(ஐ-02)

# வயோதிபரிடம் கைவரிசை காட்டிய கொள்ளையர் கைது!

யாழ்ப்பாணம், ஜூலை 23

வீடு ஒன்றுக்குள் புகுந்து வயோதிபரின் மோதிரத்தை கொள்ளையடித்தனர் என்ற குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டனர்.

மானிப்பாயில் நடந்த இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

மானிப்பாயில் வீட்டிலிருந்தவர்கள் வெளியே சென்றிருந்த நிலையில் முதியவர் மட்டும் வீட்டில் இருந்தார். அப்போது, வீட்டுக்குள் நுழைந்த இரு இளைஞர்கள் முதியவரை மிரட்டி அவர் அணிந்திருந்த மோதிரத்தை கொள்ளையிட்டு சென்றனர்.

மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் இது பற்றி முறைப்பாடு செய்யப்பட்டது. விசாரணை நடத்திய பொலிஸார் கோப்பாயை சேர்ந்த இரு இளைஞர்களை கைது செய்தனர்.

கைதானவர்களிடமிருந்து முதியவரின் மோதிரம் மீட்கப்பட்டது. சந்தேகநபர்களை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

(ஐ)

# கிளிநொச்சி வந்த வான் அநுராதபுரத்தில் விபத்து!

## இருவர் படுகாயம்

கிளிநொச்சி, ஜூலை 23

கொழும்பில் இருந்து கிளிநொச்சி நோக்கி பயணித்த ஹைஏஸ் வான் வீதியை விட்டு விலகி விபத்துக்கு உள்ளானதில் அதில் பயணித்த இருவர் படுகாயமடைந்தனர்.

அநுராதபுரம் - திரப்பனை - புஞ்சிக்குளம் பகுதியில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற இந்த விபத்தில் படுகாயமடைந்த இருவரும் அநுராதபுரம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கொழும்பில் இருந்து கிளிநொச்சி நோக்கி ஏ-9 வீதியில் வந்த வானே விபத்துக்கு உள்ளானது.

சாரதி தூங்கியதால் விபத்து ஏற்பட்டதாக முதல்கட்ட விசாரணையில் தெரியவந்தது. பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(அ)

# வெளிநாட்டுப் பயணங்களுக்காக 70 கோடி ரூபா செலவழித்த அனுர!

கொழும்பு, ஜூலை 23

ஜே.வி.பியின் அரசியல் கூட்டணியான தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க கடந்த 20 மாத காலத்தினுள் 14 நாடுகளுக்கு பயணித்துள்ளதாகவும் அதற்காக அவர் சுமார் 70 கோடி ரூபாயை செலவழித்துள்ளதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் பிரேம்நாத் சீ.தொலவத்த வெளிப்படுத்தியுள்ளார்.

அனுரகுமார திஸாநாயக்க இந்த அனைத்து பயணங்களின்போதும் அதிக விலையில் காணப்படும் வணிக வகுப்பில் பயணித்துள்ளதாக அவர் கூறியுள்ளார்.

அனுரகுமார இவ்வாறு பயணித்துள்ள நாடுகள் மாலைதீவு, குவைத், இத்தாலி, ஜேர்மனி, சுவிட்சர்லாந்து, பிரான்ஸ், அவுஸ்திரேலியா, அமெரிக்கா, சீனா ,இந்தியா , கனடா , சுவீடன் மற்றும் ஐக்கிய இராச்சியம் போன்றவையாகும்.

இந்த பயணங்களுக்கு இடையில் இவ்வருடத்தில் கடந்த 6 மாதங்களுக்குள் மாத்திரம் 4 நாடுகளுக்கு பயணம் மேற்கொண்டுள்ளார்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
23.07.2024 செவ்வாய்க்கிழமை
குரோதி வருடம், ஆடி 07

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## ஒரு புரிந்துணர்வு உடன்படிக்கை

தமிழ்த் தேசிய கட்சிகளுக்கும் தமிழ் மக்கள் பொதுச் சபைக்குமான புரிந்துணர்வு உடன்பாடு நேற்றைய தினம் தந்தை செல்வா கலையரங்கில் கைச்சாத்திடப்பட்டது. இந்த உடன்பாடு கைச்சாத்திடப்படுமா - கைவிடப்படுமா அல்லது அனைத்து கட்சிகளும் கைச்சாத்திடுமா அல்லது இடையில் சிலர் விலகி விடுவார்களா - இப்படியான பல கேள்விகளுக்கு மத்தியில் இந்த விடயம் நிகழ்ந்து முடிந்திருக்கின்றது.

முள்ளிவாய்க்காலுக்கு பின்னரான கடந்த பதினைந்து வருடங்களில் நடைபெற்ற முக்கியமானதோர் அரசியல் நகர்வாக இதனைக் கருதமுடியும். தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில் செயல்பட்டு வரும் பலவாறான கட்சிகளை ஒரு நேர்கோட்டில் சந்திக்கச் செய்ய வேண்டும் என்னும் முயற்சி பெரியளவில் வெற்றி பெறவில்லை. கடந்த பதினைந்து ஆண்டுகளில் பலர், பல்வேறு சந்தர்ப்பங்களில் - பலவாறான முயற்சிகளை மேற்கொண்ட போதிலும்கூட கட்சிகள் அனைத்தையும் ஒரு நேர்கோட்டுக்குக் கொண்டுவர முடியவில்லை.

இப்போதும் அனைத்து கட்சிகளும் ஓரிடத்தை நோக்கி வரவில்லை. ஆனால், ஒப்பீட்டு அடிப்படையில் பெரும்பாலான கட்சிகள் உடன்படிக்கையில் இணைந்திருக்கின்றன. இலங்கை தமிழ் அரசுக் கட்சி உடன்பாட்டுக்குள் வரவில்லையாயினும்கூட, தமிழ் அரசுக் கட்சிக்குள் ஒரு பகுதியினர் தமிழ் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை ஆதரிக்கின்றனர்.

தமிழ்த் தேசிய அரசியல் சூழலில் தமிழ் மக்கள் அமைப்புகளும் தமிழ்த் தேசிய நிலைப்பாடுடைய கட்சிகளும் ஒன்றிணைந்து ஒரு புரிந்துணர்வு உடன்பாட்டை ஏற்படுத்திக் கொள்வது என்பது முற்றிலும் புதியது. அதேவேளை, ஒப்பீட்டடிப்படையில் முன்னேற்றகரமானது - அவசியமானது. முள்ளிவாய்க்காலுக்கு பின்னரான தமிழ்த் தேசிய அரசியல் சூழல் என்பது வெறுமனே அரசியல் கட்சிகளுக்கு மட்டுமே உரித்தானதாக இருந்திருக்கவில்லை. அப்படியான அரசியல் நகர்வு பொருத்தமானதாகவும் இருந்திருக்கவில்லை. அதற்கு மாறாக, அரசியல் கட்சிகளும் அரசியல் விழிப்புள்ள சிவில் சமூக அமைப்புகளும் ஒன்றுபட்டு செயல்படுவதற்கான தேவையே மேலோங்கியிருந்தது.

அதாவது, ஓர் அரசியல் சமூகமென்னும் அடிப்படையில் அனைவரும் ஓரணியாக வேண்டியிருந்தது - ஓர் இலக்கை அடிப்படையாகக் கொண்டு செயல்பட வேண்டியிருந்தது. ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கு - கிழக்கில் அதிக பாராளுமன்ற ஆசனங்களை கொண்டிருந்தமையாலும் தொடர்ந்தும், நமது மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஆதரித்து வந்த நிலையிலும் - அவர்களால் - குறிப்பாக, இலங்கை தமிழ் அரசுக் கட்சியால் ஓர் அரசியல் சமூகத்தின் அங்கமாக சிந்திக்க முடிந்திருக்கவில்லை.

ஒரு தேசமாக தமிழ் மக்கள் பெரும் வீழ்ச்சியை சந்தித்தபோது ஓர் அரசியல் சமூகமாக திரள வேண்டியதே முதலாவதும் - அடிப்படையானதுமான நகர்வாக இருந்திருக்க வேண்டும். ஆனால், அது நிகழவில்லை. ஏனெனில், அரசியல் என்பது அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான ஒரு சண்டை. எவ்வாறான அரசியல் நகர்வுகளை மேற்கொண்ட போதிலும் இறுதியில் குறித்த நகர்வால் எதை அடைந்தோம் என்னும் கேள்வியே எஞ்சியிருக்கும். அந்தக் கேள்விக்கான பதிலை காண்பிப்பதில் தமிழ்த் தேசிய அரசியல் தொடர்ந்தும் பின்னடைவுகளை சந்தித்தவாறே நகர்கின்றது. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் ஜனாதிபதித் தேர்தலை ஒரு முதல் இலக்காகக் கொண்டு பெரும்பாலான கட்சிகளும் சிவில் சமூக அமைப்புகளால் ஒழுங்கமைக்கப்பட்டிருக்கும் தமிழ் மக்கள் பொதுச் சபையும் ஓர் அரசியல் சமூகமென்னும் வகையில் ஒரு புரிந்துணர்வில் கலந்திருக்கின்றனர்.

இது ஓர் ஆரம்ப நகர்வு மட்டுமே. அடுத்த கட்டமாக சின்னம் மற்றும் வேட்பாளர் தொடர்பிலும் விரைந்து முடிவுகளை மேற்கொள்ள வேண்டும். இது ஒரு முன்னுதாரணமான முயற்சி - இதனை அத்திபாரமாகக் கொண்டு தமிழ் மக்களுக்கான ஜனநாயக அரசியலை செழுமைப்படுத்த வேண்டும்.

# ஜனாதிபதித் தேர்தல் பணிக்கு தபால் திணைக்களம் தயார்!

கொழும்பு, ஜூலை 23

தேர்தல்கள் ஆணைக்குழு தேர்தல் திகதி அறிவித்தவுடன் ஜனாதிபதி தேர்தலுக்கான பணிகளை ஆரம்பிக்க தபால் திணைக்களம் முழுமையாக தயாராக உள்ளது என்று பிரதி தபால் மா அதிபர் ராஜித ரணசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கொண்டவாறு அவர் தெரிவித்துள்ளார்.

சுமுகமான தேர்தல் நடைமுறையை உறுதிப்படுத்தத் தேவையான அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளன. அனைத்து வீடுகளுக்கும் உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை விநியோகிக்க 8 பேர் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

தபால் வாக்குகள் தொடர்பான அனைத்து ஆவணங்களையும் பாதுகாப்பான முறையில் பரிமாற்ற தபால் திணைக்களங்கள் கடமைப்பட்டுள்ளன என்று பிரதி தபால் மா அதிபர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (ஐ)

# ஜப்பான் வெளிவிவகார அமைச்சரை சந்தித்தார் அநுரகுமார திஸநாயக்க

கொழும்பு, ஜூலை 23

ஜப்பானுக்கு சென்றுள்ள தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்கவுக்கும் ஜப்பான் வெளிவிவகார அமைச்சர் யோஷிபியூயமிக்கும் இடையே நேற்று சந்திப்பு நடைபெற்றது.

ஜப்பான் வெளிவிவகார அமைச்சரின் பணிமனையில் நடந்த இந்த சந்திப்பில், இலங்கையில் நிலவுகின்ற பொருளாதார மற்றும் அரசியல் நிலைமைகள் குறித்தும் இரு நாடுகளுக்கு இடையில் நீண்டகாலமாக இருந்துவருகிற நட்புறவு தொடர்பாகவும் இராஜதந்திர மற்றும் பொருளாதார உறவுகளின் அடுத்தகட்ட நகர்வுகள் சம்பந்தமாகவும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.



அத்துடன், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாகவும் விரிவாக பேசப்பட்டது. இதன்போது ஜப்பான் வெளிவிவகார அமைச்சர் அநுரகுமார திஸநாயக்கவுக்கு வாழ்த்துத் தெரிவித்தார். (ஐ)

# கரவெட்டியில் குருதி கொடை!

வடமராட்சி, ஜூலை 23

வடக்கு, கிழக்கு புனர்வாழ்வு அமைப்பின் அனுசரணையில் கரவெட்டி ஒன்றிணைந்த இளைஞர் அமைப்பினரால் இரத்ததான முகாம் நேற்று முன்தினம் நடத்தப்பட்டது.

கரவெட்டி ஒன்றிணைந்த இளைஞர்கள் அமைப்பின் தலைவர் தலைமையில் கரவெட்டி பிரதேச மருத்துவமனையில் நட்த இரத்ததான முகாமில் கரவெட்டி பிரதேசத்துக்கு உட்பட்ட 39 பேர் இரத்த தானம் வழங்கினர்.

இந்நிகழ்வில் யாழ்ப்பாணம் போதனா



மருத்துவமனையின் இரத்த வங்கியினர் கலந்துகொண்டு இரத்தத்தை பெற்றுக் கொண்டனர். (ஐ-02)

# சுங்க அதிகாரியின்மீது பொலிஸார் தாக்குதல்!

கொழும்பு, ஜூலை 23

களுத்துறை கடற்கரையில் சுற்றுச் சூழல் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த சுங்க திணைக்கள நிர்வாக அதிகாரி ஒருவர் மீது பொலிஸார் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

தாக்குதலுக்கு உள்ளானவர் களுத்துறை பிரதேசத்தைச் சேர்ந்தவராவார். இவர், நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை களுத்துறை கடற்கரையில் சுற்றுச் சூழல் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போது அங்கு கடமையிலிருந்த பொலிஸ் அதிகாரிகள் சிலர் இவரை சோதனையிட்டுள்ளனர்.

இதன்போது, இரு சாராரிடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கத்தால் இந்தத் தாக்குதல் இடம் பெற்றுள்ளது.

தாக்குதலுக்குள்ளான சுங்கத் திணைக்கள அதிகாரி களுத்துறை போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனி - 23 செவ்வாய்க்கிழமை
குரோதி வருடம் - ஆடி 07
நல்ல நேரம் : 07.31 - 09.00
ராகு காலம் : 03.00 - 04.30
திதி : திரிதியை




**மேடம்**
சொன்ன சொல்லை காப்பாற்றுவீர்கள். வியாபாரத்தில் சந்தை ரகசியங்களை தெரிந்து கொள்வீர்கள். அலுவலகத்தில் மரியாதை கூடும். சாதித்துக் காட்டும் நாள்.

**இடபம்**
கணவன் - மனைவிக்குள் இருந்த பிணக்குகள் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். உடல் நலம் சீராகும். தொழில் லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் திருப்தி உண்டாகும். புதிய அத்தியாயம் தொடங்கும்.

**மிதுனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சிலரின் விமர்சனங்களுக்கும் கேலிப் பேச்சிற்கும் ஆளாவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களை உதாசின படுத்த வேண்டாம். விட்டுக் கொடுக்க வேண்டிய நாள்.

**கடகம்**
கடினமான வேலைகளை எளிதாக முடிப்பீர்கள். உத்தியோகத்தில் உங்களின் நிர்வாகத் திறமை வெளிப்படும். சக ஊழியர்கள் உங்களுக்கு உதவுவார்கள். அனுபவ அறிவால் சாதிக்கும் நாள்.

**சிம்மம்**
உறவினர், நண்பர்கள் மத்தியில் அந்தஸ்து உயரும். வியாபாரத்தில் ஊழியர்களிடம் கடுமையாக நடந்து கொள்வீர்கள். அதிகாரிகள் அதிசயிக்கும்படி நடந்துகொள்வீர்கள். தொட்டது துலங்கும்.

**கன்னி**
புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். பிள்ளைகளின் வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள். நினைத்ததை முடிக்கும் நாள்.

**துலாம்**
பால்ய நண்பர்கள் உதவுவார்கள். வியாபாரத்தில் பங்குதாரர்கள் ஒத்துழைப்பார்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளிடம் நீங்கள் எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். உழைப்பால் உயரும் நாள்.

**விருச்சிகம்**
உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள். நினைத்ததை முடிக்கும் நாள்.

**தனுசு**
இதுவரை இருந்த அலைச்சல், டென்ஷன் கோபம் யாவும் நீங்கும். வியாபாரத்தில் ஏற்பட்ட இழப்புகளை சரி செய்வீர்கள். புது அதிகாரி உங்களை மதிப்பார். திடீர் திருப்பம் நிறைந்த நாள்.

**மகரம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் உணர்ச்சிவசப்பட்டு அவசர முடிவுகள் எடுக்க வேண்டாம். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களுடன் சச்சரவு வரும். அலுவலக ரகசியங்களை வெளியிட வேண்டாம்.

**கும்பம்**
திட்டமிட்ட காரியங்களை அலைந்து திரிந்து முடிக்க வேண்டி வரும். பிள்ளைகள் பிடிவாதமாக இருப்பார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களிடம் விவாதம் வேண்டாம். பொறுமை தேவைப்படும் நாள்.

**மீனம்**
எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். சக ஊழியர்களின் ஒத்துழைப்பால் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். மதிப்புக் கூடும் நாள்.

# திருத்தணியில் இம்முறை முருக பக்தர்கள் மாநாடு

## அர்ஜுன் சம்பத் தகவல்

கும்பகோணம், ஜூலை 23

திருத்தணியில் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 6ஆம் திகதி முருக பக்தர்களின் 2ஆவது மாநாடு நடத்தப்படும் என்று இந்து மக்கள் கட்சியின் தலைவர் அர்ஜுன் சம்பத் தெரிவித்தார்.

முருகனின் ஆறுபடை வீடுகளைத் திருப்பதிக்கு நிகராக மேம்படுத்த வேண்டும் என்றும் கோவில்களில் பக்தர்களிடம் கட்டணங்கள் வசூலிப்பதை நிறுத்த வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

கும்பகோணத்தை அடுத்த சுவாமிமலையில், இந்து மக்கள் கட்சி சார்பில் முருக பக்தர்களின் சூரசம்ஹாரம் மாநாடு நடைபெற்றது.

இதில், சொக்கபுர ஆதீனம் சிறி காரியம் தம்புரான் சுவாமிகள், இந்து மக்கள் கட்சி சித்தர் பேரவையின் அண்ணாமலை சித்தர், நடிகர்கள் கஞ்சா கருப்பு, வையாபுரி, திரைப்பட இயக்குநர் மோகன் ஜி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



மாநாட்டின் பின்னர் செய்தியாளர்களுக்கு கருத்து தெரிவித்த அர்ஜுன் சம்பத் கூறுகையில், அறநிலையத் துறை சார்பில் கோவில்களில் இந்து மத மாநாடு நடத்துவது வரவேற்கத்தக்கது. கந்தசஷ்டி கவசம், திருப்புகழ் போன்றவற்றை பாடப் புத்தகங்களில் இடம்பெற செய்ய வேண்டும்.

தமிழகத்தில் சட்டம் - ஒழுங்கு கேள்விக்குறியாகியுள்ளது. தமிழக ஆளுநர், இது தொடர்பான அறிக்கையை மத்திய அரசிடம் அளிக்க வேண்டும். விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன், பட்டியலின மக்களை தவறாக வழி நடத்திக் கொண்டிருக்கிறார். தமிழகத்தில் மின்சார கட்டண உயர்வு அறிவிப்பை திரும்பப் பெறக் கோரி, விரைவில் போராட்டம் நடத்தவுள்ளோம்- என்றார். (எ)

# துணை முதல்வர் பதவி கொடுக்க உதயநிதிக்கு என்ன தகுதி உள்ளது?

## எதிர்க்கட்சித் தலைவர் கேள்வி

சேலம், ஜூலை 23

கருணாநிதியின் பேரன், ஸ்டாலினின் மகன் என்பதைத் தவிர உதயநிதிக்கு வேறு என்ன தகுதி உள்ளது என்று அ. தி. மு. க. பொதுச் செயலாளரும் எதிர்க்கட்சித் தலைவருமான பழனிச்சாமி கேள்வி எழுப்பியுள்ளார்.

தி. மு. கவில் பல ஆண்டுகள் உழைத்தவர்களும், அனுபவமிக்க அமைச்சர்களும் உள்ளனர். ஆனால், குடும்ப கட்சியான தி. மு. கவில், அவர்களுக்குத் துணை முதல்வர் பதவி கிடைக்காது என்றும் அவர் கூறியுள்ளார்.

சேலம் மாவட்டம் ஓமலூரில் மாற்றுக் கட்சியினர் அ. தி. மு. கவில் இணையும் நிகழ்ச்சி, பழனிச்சாமி முன்னிலையில் நடைபெற்றது. இதன் பின்னர் நடந்த செய்தியாளர்கள் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தி. மு. க. ஆட்சியில் அம்மா உணவகங்களின் எண்ணிக்கை குறைந்து வருகிறது. சென்னையில் 19 உணவகங்களை மூடிவிட்டனர். இதனால்தான் தி. மு. க. அரசு மீது மக்களுக்கு வெறுப்பு ஏற்பட்டுள்ளது. எனவேதான், அம்மா உணவகத்துக்கு சென்று முதல்வர் ஆய்வு செய்துள்ளார் என்றும் பழனிச்சாமி கூறினார். (எ)

# தமிழகமே ஸ்தம்பிக்கும் போராட்டம் விரைவில்!

## தி. மு. கவுக்கு ராமதாஸ் எச்சரிக்கை

விழுப்புரம், ஜூலை 23

இடஒதுக்கீடு கோரி தமிழகமே ஸ்தம்பிக்கும் வகையில் தீவிரமாக ஒரு போராட்டம் நடத்தினால்தான் இந்த தி. மு. க. அரசு பணியும் அல்லது இடஒதுக்கீடு கொடுக்கும் என நம்புகிறோம் என்று பா. ம. க. நிறுவுநர் ராமதாஸ் தெரிவித்தார்.

திண்டிவனம் அருகே தைலாபுரம் தோட்டத்தில் வன்னியர் சங்கத்தின் 45ஆம் ஆண்டு விழாவை முன்னிட்டு வன்னியர் சங்கத்தின் கொடியை ராமதாஸ் ஏற்றி வைத்தார். இதன் பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த அவர் மேற்கண்டவாறு கூறினார். (எ)

# "மற்றவர்களை விமர்சிப்பதே தி.மு.கவின் முழுநேர வேலை"

சென்னை, ஜூலை 23

மக்கள் பணிகளை செய்யாமல் மற்றவர்களை விமர்சிப்பதே தி. மு. க. அரசின் முழுநேர வேலை என தமிழக பா. ஜ. க. மாநில தலைவர் அண்ணாமலை குற்றஞ்சாட்டியுள்ளார்.

கடந்த 10 ஆண்டுகளில் தமிழகத்தின் நலனை கருத்தில் கொண்டு எண்ணற்ற நலத் திட்டங்களை நிறைவேற்றிய பிரதமர் நரேந்திர மோடி, வரும் காலங்களிலும் தமிழகத்தின் அனைத்து தேவைகளையும் நிறைவேற்றுவார்.

ஆனால், இங்கு தி. மு. க. அரசோ, தாங்கள் செய்ய வேண்டிய பணிகளை மறந்து மற்றவர்களை விமர்சிப்பதை முழு நேர வேலையாகக் கொண்டுள்ள போக்கை இனிவரும் காலங்களிலாவது மாற்றிக் கொள்ள வேண்டும் என்று அண்ணாமலை தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராளுமன்றத்தை கலைக்க நேரிடலாம்!

**கூறுகிறார் சன்ன ஜயசுமண**



கொழும்பு, ஜூலை 23

**“22 ஆம் அரசியலமைப்பு திருத்தம் நாடாளுமன்றில் முன்வைக்கப்படும் பட்சத்தில் அதனை மூன்றில் இரண்டு பெரும்பான்மையினால் நிறை வேற்ற முடியாது போனால் ஜனாதிபதி பாராளுமன்றத்தை கலைக்க நேரிடும்” என முன்னாள் அமைச்சர் சன்னஜயசுமன தெரிவித்தார்.**

நொச்சியாகம பிரதேசத்தில் ஊடகங்களுக்கு கருத்துரைக்கையிலேயே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

22 ஆம் திருத்தம் பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்டால் அதாவது மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைத்தால். அது தொடர்பில் உயர்நீதிமன்றத்தின் அறிவிப்பு வெளியிடப்படும்.

உயர் நீதிமன்றத்தின் பரிசீலனையின் பிரகாரம் ஜனாதிபதியின் பதவிக்காலத்தை 6 வருடங்களில் இருந்து 5 வருடங்களாக குறைப்பதற்கு மக்கள் கருத்துக்கணிப்பு கோரப்பட வேண்டும் என உயர்நீதிமன்றம் பரிந்துரை முன்வைத்தால் ஜனாதிபதி அதற்கு ஏதேனும் சூழ்ச்சிகளை மேற்கொள்வார்.

மறுபுறம் 22 ஆம் திருத்தத்தை பாராளுமன்றில் 3 இல் 2 பெரும்பான்மையினால் நிறைவேற்ற முடியாது போனால் ஜனாதிபதி பாராளுமன்றத்தை கலைப்பதற்கான சாத்தியம் உள்ளது.

தற்போதைய நிலையில் பாராளுமன்றம் கலைக்கப்படுவதை தற்போது அங்கம் வகிக்கும் பாராளுமன்ற உறுப்பினர்கள் எவரும் விரும்பமாட்டார்கள்-என்றார். (அ)

## நீர் நிரம்பிய கற்குழிக்குள் மூழ்கி தாய், 2 பிள்ளைகள் உயிரிழப்பு!

கொழும்பு, ஜூலை 23

அம்பாந்தோட்டை, திஸ்ஸ மஹாராம காவந்திஸ்ஸ புர பகுதியில் நீர் நிரம்பிய கற்குழிக்குள் மூழ்கி தாய் மற்றும் இரண்டு பிள்ளைகள் உயிரிழந்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

தாயும் இரண்டு பிள்ளைகளும் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் நீராடச் சென்ற போது இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

32 வயதுடைய தாய், 14 வயது மற்றும் 9 வயதுடைய இரண்டு சிறுவர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

தாயின் சடலம் நேற்றையதினம் இரவு கண்டெடுக்கப்பட்டதோடு, இரு பிள்ளைகளின் சடலங்களை தேடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (அ)

## தேர்தல் செயலகத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டம்!

கொழும்பு, ஜூலை 23

ஜனாதிபதித் தேர்தலை திட்டமிட்டபடி நடத்துமாறு கோரி, பல சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் நேற்று இராஜகிரியில் உள்ள தேர்தல் செயலக அலுவலகத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்

‘பிரஜைகள் கூட்டணி’ உறுப்பினர்களே இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

இதில் சதிப்புரட்சிக்கு இடமளிக்கப்படமாட்டாது, ஜனாதிபதித் தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும், சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழுவின் அதிகாரத்தை உடனடியாக பிரயோகிக்க வேண்டும் என்ற பதாதைகளை ஏந்தியவாறு இவர்கள் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## அசங்க அபேகுணசேகர பிணையில் விடுவிப்பு!

கொழும்பு, ஜூலை 23

தேசிய பாதுகாப்பு கற்கைகள் நிறுவகத்தின் முன்னாள் பணிப்பாளர் அசங்க அபேகுணசேகர கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைது செய்யப்பட்ட நிலையில் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றில் அவர் முன்னிலைப்படுத்தப்பட்டபோது, தலா ஒரு மில்லியன் பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் செல்வதற்கு நீதவான் அனுமதியளித்தார்.

அத்துடன் இது தொடர்பான வழக்கு எதிர்வரும் ஓகஸ்ட் 9ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டு இறைவரி திணைக்களத்தினால் முன்னெடுக்கப்படும் விசாரணைகளுக்கமைய, பிறப்பிக்கப்பட்டுள்ள திறந்த பிடியாணையின் பிரகாரம், அசங்க அபேகுணசேகர கைது செய்யப்பட்டதாகக் பொலிஸார் தெரிவித்தனர்.

விமான நிலையத்தில் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்ட அவர் பின்னர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். கட்டாரில் இருந்து நாடு திரும்பிய நிலையிலேயே அவர் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## ஜீவன் தொண்டமானை கைது செய்ய உத்தரவு!

கொழும்பு, ஜூலை 23

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், அமைச்சருமான ஜீவன் தொண்டமானுக்கு எதிராக கைது உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

களனிவெளி பெருந்தோட்டத்திற்குட்பட்ட பீட்ரு தேயிலைத் தொழிற்சாலைக்குள் அத்துமீறி நுழைந்த சம்பவம் தொடர்பில் தொடரப்பட்ட வழக்கில் ஆஜராகாத அமைச்சர் ஜீவன் தொண்டமான் மற்றும் ஏனையவர்களைக் கைதுசெய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு நுவரெலியா மாவட்ட நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டார்.

களனிவெளி பெருந்தோட்டத்திற்குட்பட்ட பீட்ரு தேயிலைத் தொழிற்சாலைக்குள் மே மாதம் 30 ஆம் திகதி அத்துமீறி நுழைந்ததாகக் கூறி அமைச்சர் ஜீவன் தொண்டமான் உட்பட அவரது சகாக்களுக்கு எதிராக களனிவெளி பெருந்தோட்ட நிறுவனத்தால் நுவரெலியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததையிட்டு நேற்று நுவரெலியா மாவட்ட நீதிமன்றத்தில் குறித்த வழக்கு நீதிபதி ஜயமினி அம்பகஹவத்தவினால் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

குறித்த வழக்கு தொடர்பாக களனிவெளி பெருந்தோட்ட நிறுவனத்திற்கு சார்பாக ஜனாதிபதி சட்டத்தரணி அனுர மெத்தேகொட, வழக்கறிஞர் பாலித சுபசிங்க மற்றும் வழக்கறிஞர் சுரேஷ் சுயான் ஆகிய மூன்று வழக்கறிஞர்களும் முன்னிலையாகியிருந்தனர்.

இவ்வழக்கின் பிரதான சந்தேக நபரான நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் மற்றும் அவர் சார்ந்த ஏனையவர்களுக்கு நேற்று வழக்கு விசாரணைக்கு வருகை தரும்படி நுவரெலியா மாவட்ட நீதிமன்றத்தினால் அழைப்பு விடுக்கப்பட்டது.

இருப்பினும், நேற்று குறித்த வழக்குக்கு அமைச்சர் ஜீவன் தொண்டமான் வருகை தரவில்லை என்பதால் இது தொடர்பான மேலதிக தகவல்களை நுவரெலியா பொலிஸாரால் நீதிமன்றத்திற்கு சமர்ப்பித்ததையடுத்து தகவல்களை பரிசீலனை செய்த நீதிபதி ஜயமினி அம்பகஹவத்த இவ்வழக்கின் பிரதான சந்தேக நபரான அமைச்சர் ஜீவன் தொண்டமான் மற்றும் ஏனையவர்களைக் கைதுசெய்து நீதிமன்றத்தில் முன்னிலையாக்கும்படி உத்தரவிட்டார். (அ)

## இடைக்காலக் கொடுப்பனவு விடயத்தில் இ.தொ.கா, முற்போக்கு கூட்டணி ஓரணியில்!

கொழும்பு, ஜூலை 23

தோட்டத் தொழிலாளர்களுக்கு இடைக்கால கொடுப்பனவு வழங்குவது தொடர்பில் தம்மால் முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கையை வரவேற்றுள்ள தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசனுக்கு, இ.தொ.காவின் தலைவரும், கிழக்கு மாகாண ஆளுநருமான செந்தில் தொண்டமான் நன்றி தெரிவித்துள்ளார்.

தொழிலாளர்களின் சம்பள பிரச்னைக்கு தீர்வு எட்டும் வரை அவர்களுக்கு இடைக்கால தொகையாக 5000 வழங்க வேண்டும் என ஜனாதிபதியிடம் இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமான் முன்வைத்த கோரிக்கையை மனோ கணேசன் வரவேற்றிருந்தார்.

மனோகணேசன், சம்பள பிரச்னையில் அரசியல் ஆதாயம் தேடாமல் கருத்து தெரிவித்தது வரவேற்கத்தக்கதும், பாராட்டுக்குரியதும் என செந்தில் தொண்டமான் தனது முகநூல் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

அதேவேளை, இடைக்காலக் கொடுப்பனவு விடயத்தில் மலையகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் இரு கட்சிகளும் ஒருமித்த நிலைப்பாட்டில் உள்ளன என்பதை இரு கட்சிகளின் பிரதிநிதிகளின் கருத்துகள் வெளிப்படுத்தியுள்ளன. (அ)

## ரயில் நிலைய அதிபர்கள் சங்கம் மீண்டும் அரசுக்கு எச்சரிக்கை!

கொழும்பு, ஜூலை 23

922 ரயில் நிலைய அதிபர்களின் தொழில்சார் பிரச்னைகளான பதவி உயர்வு, ஆட்சேர்ப்பு போன்றவற்றுக்கு அமைச்சரவை தீர்வு காணாவிட்டால் நாளை முதல் மீண்டும் தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட நேரிடும் என ரயில் நிலைய அதிபர்கள் சங்கம் எச்சரித்துள்ளது.

தமது 13 கோரிக்கைகளில் 6 கோரிக்கைகளுக்கு தீர்வை வழங்குவதாக அமைச்சர் உறுதியளித்ததாகவும் நேற்று சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்தின் பிரகாரம் தீர்வுகள் எதிர்பார்க்கப்படுவதாகவும் அந்த சங்கத்தின் தலைவர் சுமேத நவரத்ன தெரிவித்தார்.

இந்நிலையில் அந்த அறிக்கைக்கு பதிலளித்த போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பந்துல குணவர்தன, ரயில் ஊழியர்கள் தொடர்ந்தும் பணிப்புறக்கணிப்பு செய்தால், சேவையை கைவிட்டது போன்று பணி நீக்கம் செய்யப்படுவார்கள் எனத் தெரிவித்தார்.

ரயில் சேவை அத்தியாவசிய சேவையாக வர்த்தமானியில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாகவும், ரயில்துறை தொடர்பான பிரச்னை இருப்பின் கலந்துரையாடல் மூலம் தீர்வு காண முடியும் எனவும் அமைச்சர் மேலும் கூறினார்.

மக்களை ஒடுக்கும் வகையில் வேலைநிறுத்தம் செய்தால் வேலையில் இருந்து நீக்கப்படுவார்கள் எனவும், இலங்கையின் சட்டங்களுக்கு மதிப்பளிக்க வேண்டும் எனவும் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் குறிப்பிட்டார். (அ)

## காட்டுக்கு தீ வைப்பதை தவிர்க்குமாறு கோரிக்கை!

கொழும்பு, ஜூலை 23

நாட்டின் பல மாவட்டங்களில் காட்டுத் தீப்பரவல் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்தார்.

இதுவரையில் பதுளை மாவட்டத்தில் 6 காட்டுத் தீப்பரவல் சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இந்த நிலையில் காட்டுக்கு தீ வைப்பதைத் தவிர்க்குமாறு அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி கோரியுள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டில் சிறுவர்களில் 25 வீதம் பேர் வறுமையால் கடுமையாக பாதிப்பு

## அரசிடம் இதுவரை எந்த வேலைத்திட்டமும் இல்லை என்கிறார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச

கொழும்பு, ஜூலை 23

**சிறுவர் வறுமை என்பது சமூகத்தில் கவனத்திற் கொள்ளாத ஓர் விடயமாக மாறியுள்ளது. சர்வதேச புள்ளிவிவரங்களின்படி, நமது நாட்டின் சிறுவர்களில் 25 வீதமானோர் குழந்தை வறுமையால் பாதிக்கப்பட்டுள்ளனர். புள்ளிவிவரங்களின்படி, 42 வீதமான சிறுவர்கள் பல் பரிமாண வறுமையால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதற்கு எம்மால் இடமளிக்க முடியாது என்ற எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.**



இவை சர்வதேச சனத்தொகை கணக்கெடுப்பு மற்றும் ஆய்வுகள் மூலம் தெரிய வந்துள்ளது. குழந்தைகளின் வறுமையை ஒழிக்க உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையிலான ஒரு தேசிய வேலைத்திட்டம் கொண்டு வரப்பட வேண்டும். சிறுவர் வறுமையை ஒழிப்பதற்கான ஜனாதிபதி செயலணியொன்று ஸ்தாபிக்கப்பட்டு, 25 மாவட்டங்களிலும் பிரதேச செயலகத்தின் ஊடாக இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் கூறினார்.

பிரபஞ்சம் தகவல் தொழிநுட்ப வேலைத்திட்டத்தின் கீழ், 357 ஆவது கட்டமாக 1,177,000 இலட்சம் ரூபா பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள் மற்றும் அகராதிகள் என்பன கம்பஹா, தொம்பே, ரதாவான, மஹகமசேகர மகா வித்தியாலயத்திற்கு வழங்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. இந்நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வறுமை காரணமாக பிள்ளைகள் பாடசாலைக்கு செல்லாமை, குறிப்பிட்ட கல்வியைப் பெறாமை, மற்றும் பரீட்சைகளில் தோற்றாமை, தேர்ச்சி பெறாமை போன்ற காரணங்களால் வேலை கிடைக்காது வறுமை நிலையை எதிர்கொண்டுள்ளனர். இது சிறுவர் வறுமை தொடர்பான ஆபத்தான சுழற்சியாகும். இது தொடர்பாக எந்த அரச திட்டமும் முன்னெடுக்கப்படவில்லை.

இதை களைய நடவடிக்கை எடுப்பதே நமது கடமையும் பொறுப்புமாகும். இந்த முக்கிய பிரச்சினைக்கு தீர்வுகள் காணப்பட வேண்டும்.

இன்று பிள்ளைகளுக்கு 3 வேளை உணவு கூட கிடைக்காத நிலை காணப்படுகிறது. வகுப்பறைகளில் மயங்கி விழும் பிள்ளைகளும் இருந்து வருகின்றனர். இதை கண்டு கொண்டே கொள்கை வகுப்பாளர்களால் வெறுமனே பார்த்துக் கொண்டிருக்க முடியாது.

ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தில் சிறுவர் வறுமையை ஒழிப்பதற்கான தேசிய வேலைத் திட்டத்தை ஆரம்பிப்போம். தேசிய சிறுவர் வறுமையை ஒழிக்கும் வேலைத்திட்டத்தின் ஊடாக இந்நாட்டின் அனைத்து பிள்ளைகளையும் தனது சொந்த பிள்ளைகளாக கருதி செயல்பட வேண்டும். இந்த மரணப் பொறிகளில் இருந்து அவர்களை மீட்பதற்கான தலைமைத்துவத்தை நான் வழங்குவேன்-என்றார்.

# ரணிலின் ஊழல் மோசடி குறித்து இரு கோப்புகள் எம்மிடம் உள்ளன!

### கூறுகின்றார் அனுரகுமார

கொழும்பு, ஜூலை 23

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க செய்ததாகக் கூறப்படும் ஊழல் மோசடிகள் தொடர்பான தகவல்கள் அடங்கிய இரண்டு கோப்புகள் தம்மிடம் உள்ளதாக, தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.



ஜப்பானுக்கு விஜயம் செய்துள்ள தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க, நேற்று முன் தினம் அங்குள்ள இலங்கையர்கள் குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சந்திப்பில் கலந்துகொண்டு இதனைக் குறிப்பிட்டார்.

தமது அரசாங்கத்தின் கீழ் குறித்த ஊழல்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.(அ)

# கிளப் வசந்த படுகொலை; 6 பேருக்கு விளக்கமறியல்

கொழும்பு, ஜூலை 23

கிளப் வசந்த என்றழைக்கப்படும் சுரேந்திர வசந்த பெரேரா மற்றும் பலர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டமை தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களில் 6 பேர் எதிர்வரும் 26ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் நேற்று திங்கட்கிழமை காலை கடுவலை நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சம்பவத்தின் பிரதான சந்தேகநபரான பச்சை குத்தும் நிலைய உரிமையாளரிடம் நேற்று பிற்பகல் நீதிமன்றத்தில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

கடந்த ஜூலை மாதம் 8ஆம் திகதி அத்துருகிரிய சந்தியில் பச்சை குத்தும் நிலைய திறப்பு விழாவில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் கிளப் வசந்த மற்றும் நயன வசல விஜேசூரிய என்ற 37 வயதான நபர் ஆகியோர் உயிரிழந்தனர்.

துப்பாக்கி பிரயோகத்தில் பாடகி கே.சுஜீவா மற்றும் கிளப் வசந்தவின் மனைவி உள்ளிட்ட நால்வர் காயமடைந்தனர். (அ)

# வெலிக்கடை சிறையிலிருந்து தப்பிக்க முயன்ற கைதி கைது!

கொழும்பு, ஜூலை 23

வெலிக்கடைச் சிறைச்சாலையிலிருந்து தப்பிச் செல்ல முயன்ற கைதி ஒருவர் சிறைச்சாலை அதிகாரிகளால் கடந்த 20 ஆம் திகதி கைது செய்யப்பட்டார்.

பாலியல் துஷ்பிரயோக குற்றச்சாட்டு தொடர்பில் 9 வருட கால கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட கைதியொருவரே இவ்வாறு தப்பிச் செல்ல முயன்றுள்ளார்.

இவர் மிகவும் சூட்சுமமான முறையில் சிறைச்சாலையினுள் உள்ள மரமொன்றில் பல மணிநேரமாக மறைந்திருந்து பின்னர் சிறைச்சாலையின் கூரை வழியாக தப்பிச் செல்ல முயன்ற போது கைது செய்யப்பட்டுள்ளதாக சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த சம்பவத்தையடுத்து, சிறைச்சாலையின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக சிறைச்சாலை அதிகாரிகள் மேலும் தெரிவித்துள்ளனர்.

தப்பிச் செல்ல முயன்ற கைதி மீது சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்கப்படும் என சிறைச்சாலை திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

# சிறுவர்களுக்கான தடுப்பூசி வழங்கலை மேம்படுத்த ஜப்பானின் உதவியுடன் குளிரூட்டிய ட்ரக் வண்டிகள்

கொழும்பு, ஜூலை 23

இலங்கை முழுவதிலும் சிறுவர்களுக்கான தடுப்பூசி வழங்கல் முறைமையை மேம்படுத்துவதற்காக யுனிசெப் நிறுவனம் ஜப்பான் அரசாங்கத்தின் நிதியுதவியுடன் சுகாதார அமைச்சுக்கு ஒன்பது குளிரூட்டப்பட்ட ட்ரக் வண்டிகளை கையளித்தது.

இலங்கைக்கான ஜப்பான் நாட்டின் தூதுவர் மிசுகோஷி ஹிடேகி மற்றும் யுனிசெப் நிறுவனத்தின் இலங்கைக்கான செயல்படும் பிரதிநிதி பேகோனா அரேலானோ ஆகியோரின் பங்கேற்புடன் சுகாதார அமைச்சகத்தில் நடைபெற்ற நிகழ்வில் சுகாதார அமைச்சர் வைத்தியர் ரமேஷ் பத்திரணவிடம் அந்த ட்ரக் வண்டிகள் கையளிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் உரையாற்றிய வைத்தியர் ரமேஷ் பத்திரன, இலங்கையின் சுகாதார முறைமையின் மிகவும் முக்கிய தூண்களில் ஒன்றான நிரப்பீடனமாக்கல் செயற்றிட்டத்தினை மேலும் பலப்படுத்துவதற்காக ஜப்பான் அரசாங்கம் மற்றும் யுனிசெப் நிறுவனம் இணைந்து வழங்கும் இந்த ஒத்துழைப்பினை மனப்பூர்வமாக வரவேற்பதாக கூறி, இது தடுப்பூசிகளை பாதுகாப்பாக உரிய நேரத்திற்கே கொண்டு செல்வதற்கு சுகாதார அமைச்சுக்கு துணை நிற்கும் என்றும் குறிப்பிட்டார்.

இங்கு உரையாற்றிய இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் மிசுகோஷி ஹிடேகி, "இலங்கையின் சுகாதார அமைச்சுக்கு ஒன்பது குளிரூட்டப்பட்ட ட்ரக் வண்டிகளை கையளிப்பதில் நான் பெருமிதம்கொள்கிறேன். இது இலங்கையின் பொதுச் சுகாதார சேவைகளை பலப்படுத்துவதற்காக ஜப்பான் தொடர்ச்சியாக வழங்கி வருகின்ற அர்ப்பணிப்பினை மேலும் சாட்டுமென உறுதியாக நம்புகிறேன்.

நாடு முழுவதும் தடுப்பூசிகளை தடையின்றி கொண்டு செல்வதற்கான முக்கியமான போக்குவரத்துச் சாதனமாக இந்த ட்ரக் வண்டிகள் விளங்கு மென்பதோடு, ஒவ்வொரு சமூகமும் தடுக்கக்கூடிய நோய்களுக்கெதிராக அவசியமான பாதுகாப்பினைப் பெறுவதை உறுதி செய்யும்" என்றும் குறிப்பிட்டார். (அ)

# நண்பர்களுடன் மதுபானம் அருந்தியவர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு கொலை!

கொழும்பு, ஜூலை 23

ஹம்பேகமுவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குகுல்கடுவ பகுதியில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளதாக ஹம்பேகமுவ பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது.

மத்துகம பகுதியில் வசிக்கும் 51 வயதுடைய நபரொருவரே கொலை செய்யப்பட்டுள்ளார்.

கொலை செய்யப்பட்டவர் மேலும் இரண்டு நண்பர்களுடன் இணைந்து மதுபானம் அருந்திக் கொண்டிருந்த நிலையில், நண்பர்களுக்கு இடையில் ஏற்பட்ட தகராறில் இந்த தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

கொலை செய்யப்பட்டவரது சடலம் எம்பிலிப்பிட்டிய வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பில், ஹம்பேகமுவ பகுதியில் வசிக்கும் 25 மற்றும் 27 வயதுடைய இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# குருநாகலில் லொறி மோதி வயோதிபர் ஒருவர் மரணம்

கொழும்பு, ஜூலை 23

குருநாகல், மாவத்தகம பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கண்டி - குருநாகல் வீதியில் வேஉட பகுதியில் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற விபத்தில் வயோதிபர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக மாவத்தகம பொலிஸார் தெரிவித்தனர்.

குருநாகலிலிருந்து கண்டி நோக்கிப் பயணித்த லொறி ஒன்று வீதியில் பயணித்த வயோதிபர் மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தின்போது படுகாயமடைந்த வயோதிபர் மாவத்தகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கணேகொட, வேஉட பகுதியில் வசிக்கும் 74 வயதுடைய வயோதிபரொருவரே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரது சடலம் மாவத்தகம வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து லொறி சாரதி சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாக வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் கூறினர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரம்பமானது ஆசிரியர்களின் தொழிற்சங்க நடவடிக்கை

கொழும்பு, ஜூலை 23

**ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் தொழிற்சங்க நடவடிக்கை நேற்று முதல் இரண்டு வாரங்களுக்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் சங்கங்கள் தெரிவித்துள்ளன.**

அத்துடன் அரசியல் இயக்கங்களை வலுப்படுத்தும் நோக்கில் திட்டமிடப்பட்டுள்ள தொழிற்சங்க நடவடிக்கைக்கு தாம் ஆதரவளிக்கவில்லை என ஆசிரியர் - அதிபர் ஒன்றியத்தின் அழைப்பாளர் உலப்பனே சுமங்கல தேரர் குறிப்பிட்டார்.

எதிர்வரும் 15 நாட்களுக்கு வகுப்பறைகளில் கற்பித்தல் நடவடிக்கைகளில் மாத்திரம் ஈடுபடவுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

அதன்படி, நேற்று முதல் மாகாண கல்வி மற்றும் பிராந்திய கல்வி அலுவலகங்களால் பரிந்துரைக்கப்படும் செயலமர்வுகள், பயிற்சி நிகழ்ச்சிகளில் பங்கேற்கமாட்டோம் என்றும் அவர்கள் கூறினர்.

சகல வெளி நடவடிக்கைகளில் இருந்தும் விலகிக் கொள்வதாகவும் இலங்கை தேசிய அதிபர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் பராக்கிரம விக்ரமசிங்க தெரிவித்தார்.

(அ)

# சர்வஜன வாக்கெடுப்பு இப்போது தேவையற்றது

## கூறுகின்றது பவ்ரல்

கொழும்பு, ஜூலை 23

சர்வஜன வாக்கெடுப்பு தேவைப்படும் அரசமைப்பு திருத்தம் எதனையும் இந்த நேரத்தில் அரசாங்கம் அறிமுகப்படுத்தக்கூடாது என தேர்தல் கண்காணிப்பு அமைப்பான பவ்ரல் வேண்டுகோள் விடுத்துள்ளது.

பொருளாதார நெருக்கடி நிலவும் சூழ்நிலையில் 10 பில்லியன் செலவு செய்து சர்வஜன வாக்கெடுப்பை நிதிக்குற்றத்திற்கு சமமானது என பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோகண ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

போதிய நிதியின்மையால் உள்ளூராட்சித் தேர்தலை ஒத்தி வைத்துள்ள நிலையில் அரசாங்கம் அரசமைப்பு திருத்தங்கள் குறித்து ஆராய்வதை அவர் கடுமையாக சாடியுள்ளார்.

இவ்வாறான நடத்தை அரசாங்கம் மக்கள் எதிர்நோக்கும் நெருக்கடிகளுக்கு தீர்வை காண்பதற்கு பதில் அதிகாரத்தை தக்கவைப்பது குறித்தே ஆர்வமாக உள்ளதை வெளிப்படுத்தியுள்ளது என அவர் தெரிவித்தார்.

(அ)

# மோட்டார் சைக்கிளில் சென்ற தம்பதிமீது துப்பாக்கிச் சூடு!

கொழும்பு, ஜூலை

மித்தெனிய பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கல்பொத்தாய - ஜூலம்பிட்டிய வீதியில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

சுதந்திரக் கட்சியின் உள்ளூராட்சி மன்ற வேட்பாளர் ஒருவரே நேற்று முன் தினம் இரவு 10 மணி அளவில் இந்த துப்பாக்கிச் சூட்டின் இலக்காக அமைந்துள்ளார்.

கடையை மூடிவிட்டு தனது மனைவியுடன் மோட்டார் சைக்கிளில் வீட்டுக்குச் சென்று கொண்டிருந்தபோதே இந்த துப்பாக்கிச் சூடு இடம்பெற்றுள்ளது.

துப்பாக்கிச் சூட்டில் மோட்டார் சைக்கிள் கவிழ்ந்ததில் குறித்த நபரின் மனைவியும் காயமடைந்துள்ளார்.

இருவரும் சிகிச்சைக்காக மித்தெனிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

பின்னர் மேலதிக சிகிச்சைக்காக மனைவி எம்பிலிபிட்டிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

இலங்கையில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி ஒன்று துப்பாக்கிச் சூட்டுக்கு பயன்படுத்தப்பட்டதாகவும், துப்பாக்கிச் சூடு நடத்தியவர் துப்பாக்கியை அந்த இடத்திலேயே விட்டுவிட்டு தப்பிச் சென்றதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

(அ)

# வெள்ளம், டெங்கு பரவலைக் கட்டுப்படுத்த கடுமையான தீர்மானங்கள் எடுக்கப்படும்!

## சாகல ரத்நாயக்க தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 23

கடுமையான தீர்மானங்களை எடுத்து நாட்டை பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்டது போன்றே, வெள்ளம் மற்றும் டெங்கு பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான முடிவுகளையும் எடுக்க வேண்டும் என்றும், அதன் பிரதிபலன்கள் இன்னும் சில வருடங்களில் தெரியும் எனவும் தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

நாட்டு மக்கள் என்ற வகையில் தமது கடமைகளை சரியாக செய்தால் டெங்கு நோய் இந்தளவுக்கு பரவாது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

கொழும்பு தாஜ் சமுத்ரா ஹோட்டலில் நடைபெற்ற இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் கொழும்புக் கிளையால் நடத்தப்படும் வெள்ள அபாயங்கள் மற்றும் டெங்கு ஒழிப்பு பிரச்சாரத்தின் ஆரம்ப நிகழ்வில் பங்குபற்றிய தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அனர்த்தம் ஏற்படும் சந்தர்ப்பத்தில், அரசாங்கம், பல்வேறு அமைப்புகள், நாடுகள் பெருமளவில் பணம் செலவிட வேண்டியுள்ளது. வெள்ள நிலை ஏற்படுவதற்கு முன்பே அதைத் தணிக்க நடவடிக்கை எடுத்தால், வெள்ளச் நிலைமையில் நாம் செலவழிப்பதை விட அதிகப் பணத்தைச் சேமிக்க முடியும்.

மேலும், டெங்குவைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளுக்கான செலவு, டெங்கு நோய்க்கான சுகாதார சேவைகளின் செலவை விட மிகக் குறைவாக இருக்கும் என்பதையும் கூற வேண்டும். உயிரிழப்பு மற்றும் குடும்ப உறுப்பினர்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகளை பணத்தால் மதிப்பிட முடியாது என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

இவை அனைத்தையும் பற்றி சரியான முடிவுகளை எடுக்க வேண்டிய நேரம் ஏற்பட்டுள்ளது. இந்த முடிவுகள் பலர் அறியப்படாத ஒன்றாக இருக்கலாம். எனினும், சரியான முடிவுகளை எடுக்க வேண்டும். கடுமையான முடிவுகளை எடுத்ததால்தான் பொருளாதார நெருக்கடியிலிருந்து நாம் மீண்டு வர முடிந்தது. அத்தகைய முடிவுகளின் பலனை சில ஆண்டுகளுக்குப் பிறகுதான் கண்டுகொள்ள முடியும்.

நாம் செய்த கட்டமைப்பு ரீதியிலான மறுசீரமைப்புகள் காரணமாக, வர்த்தகம், தொழில்துறை மற்றும் முதலீடுகளை மேற்கொள்ள முடிந்தது. தற்போதைய அரசாங்கம் மோசடி மற்றும் ஊழலைக் குறைப்பதற்கான கட்டமைப்பு ரீதியிலான சீர்திருத்தங்களையும் மேற்கொண்டுள்ளது. இந்த நடவடிக்கைகளின் போது எடுக்கப்பட்ட முடிவுகள் பிரபல்யமானதாக இருக்கவில்லை. ஆனால் இலங்கையில் தேர்தல்கள் நெருங்கும் போது பிரபலமான முடிவுகளை எடுப்பதே வழக்கமாக உள்ளது.

ஆனாலும், வெள்ளம், டெங்கு போன்ற பிரச்னைகளில் பிரபல்யமற்ற கடுமையான முடிவுகளை எடுக்க வேண்டியுள்ளது. கடந்த அனர்த்த நிலைமைகளின்போது, எமது நாட்டின் பொறிமுறை, மக்கள் மற்றும் அரச உத்தியோகத்தர்களின் செயற்பாடுகள் அந்த அனர்த்த நிலைமைக்கு பெரிதும் தாக்கம் செலுத்தியுள்ளமையை கண்டு கொள்ள முடிந்தது. அதன்படி தவறான இடத்தில் வீடு கட்டப்பட்டு, வடிகால்கள் அடைக்கப்பட்டு, சிலர் வயல் நிலங்களை நிரப்பி தங்கள் வீட்டிற்கு செல்ல வீதிகளை அமைத்திருப்பதையும் காண முடிகிறது.

நகரில் தேங்கியுள்ள நீர் வெளியேற முடியாமல் வடிகால்களில் அடைப்பு ஏற்பட்டுள்ளது. அல்லது ஆற்றைத் தடுத்து, ஒரு தாழ்வான நிலத்தை நிரப்பி காணிகள் உருவாக்கப்பட்டுள்ளன. அல்லது தவறான அனுமதியைப் பெற்று அல்லது திருட்டுத்தனமாக சதுப்பு நிலங்கள் நிரப்பப்படுகின்றது.

இல்லையெனில், அதிகாரம் தவறாக பயன்படுத்தப்பட்டு, நிலங்களை நிரப்பும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ்வாறான பல்வேறு தவறுகள் இன்று நாம் இருக்கும் நிலைக்கு நம்மை இட்டுச் சென்றுள்ளது. அப்படியானால், இந்த தவறுகள் இப்போதேனும் திருத்தப்பட வேண்டும்-என்றார்.

(அ)

# யாழில் இளைஞர்களிடம் 75 இலட்சம் ரூபா மோசடி!

## இரு பெண்கள் உள்ளிட்ட மூவர் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 23

யாழ்ப்பாணத்தை சேர்ந்த இளைஞர்களிடம் வெளிநாடுகளுக்கு அனுப்பி வைப்பதாக கூறி பெருந்தொகையான பண மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இரு பெண்கள் உட்பட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வெளிநாடுகளுக்கு அனுப்பி வைப்பதாக கூறியவர்களை நம்பி பணத்தைக் கொடுத்து ஏமாந்த மூவர் வழங்கிய முறைப்பாட்டின் அடிப்படையில், விசாரணைகளை முன்னெடுத்த யாழ்ப்பாண பொலிஸார் மூவரை கைது செய்துள்ளனர்.

மானிப்பாய் பகுதியைச் சேர்ந்த பெண்ணொருவரை 10 இலட்ச ரூபாய் மோசடி செய்த குற்றச்சாட்டிலும், காத்தான்குடிப் பகுதியை சேர்ந்தவரும் தற்போது களுத்துறைப் பகுதியில் வசித்து வரும் பெண்ணொருவரை 25 இலட்ச ரூபாய் மோசடி செய்த குற்றச்சாட்டிலும், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவரும் தற்போது தெஹிவளையில் வசித்து வரும் நபரொருவரை 40 இலட்ச ரூபாய் மோசடி செய்த குற்றச்சாட்டிலும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

(அ)

# 6 மாதத்தில் 4,981 பில்லியன் ரூபா கடனைச் செலுத்திய இலங்கை!

கொழும்பு, ஜூலை 23

இலங்கை அரசாங்கமானது இவ்வருடத்தின் ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் ஜூன் மாதம் 30ஆம் திகதி வரையிலான ஆறு மாதக் காலப்பகுதியில் 4,981 பில்லியன் ரூபா கடனை செலுத்தியுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

இது பத்திரங்கள் மற்றும் திறைசேரி உண்டியல்கள் மூலம் பெறப்பட்ட கடனின் பெறுமதியை விட 129 பில்லியன் ரூபா அதிக கடன் தொகை எனவும் அமைச்சர் கூறினார்.

இதே காலப்பகுதியில் அரசாங்கம் பத்திரங்கள் மற்றும் திறைசேரி உண்டியல்கள் மூலம் மொத்தமாக 4,852 பில்லியன் ரூபா கடன் தொகையை பெற்றுள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.



இலங்கை மத்திய வங்கியிடமிருந்து பணத்தைப் பெறாம

லேயே உரிய கடன் தொகை செலுத்தப்பட்டுள்ளதாகவும், அரசாங்கத்தின் கடன் முகாமைத்துவம் பணச் சந்தையில் கடன் செலுத்தும் அபாயத்தைக் குறைத்துள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

இலங்கை மத்திய வங்கியில் இருந்து பணத்தை அச்சிடாமல் அரசாங்கம் கடனை அடைத்தால் நாடு ஒருபோதும் உயர் பணவீக்கத்தை நோக்கி நகராது எனவும் கடனை செலுத்துவதில் அரசாங்கத்திற்கு சிக்கல்கள் இல்லை எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை, அரசாங்கம் பெற்றுக்கொண்ட வெளிநாட்டுக் கடன்கள் உரிய முறையில் செலுத்தப்படும் எனவும் இராஜாங்க அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காத்தான்குடியில் கைக்குண்டு மீட்பு பொலிஸார், படையினர் விசாரணை





காத்தான்குடி, ஜூலை 23

**காத்தான்குடியில் குண்டுத் தாக்குதலுக்கு இலக்கான வீட்டுக்கு அண்மையில் கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்ட நிலையில் பொலிஸார், இராணுவத்தினர், விசேட அதிரடிப் படையினர் இணைந்து தீவிர தேடுதல் மற்றும் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர். இதனால் அந்தப் பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.**

மட்டக்களப்பு, காத்தான்குடியில் குண்டுத் தாக்குதலுக்கு இலக்கான வீட்டுக்கு அண்மையில் உள்ள வடிகானில் கைவிடப்பட்ட நிலையில் கைக்குண்டு ஒன்று ஞாயிற்றுக்கிழமை இரவு காணப்பட்டதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

காத்தான்குடி, பூநொச்சிமுனையில் பச்சை வீட்டுத்திட்டம் என அழைக்கப்படும் முகைதீன் ஜூம்ஆ பள்ளி வீதியில் வீடு ஒன்றின் முன்னால் உள்ள வடிகானுக்கு அருகில் கைக்குண்டு ஒன்று கிடப்பதை அவதானித்த பொது மக்கள் பொலிஸாருக்கு அறிவித்தனர்.

இதனையடுத்து பொலிஸார் சம்பவ இடத்துக்கு சென்று குறித்த கைக்குண்டை மீட்பதற்கு நீதிமன்ற அனுமதியைப் பெறுவதற்கான நடவடிக்கையை முன்னெடுத்ததுடன் விசேட அதிரடிப் படையின் குண்டு செயலிழக்கும் பிரிவினர் அழைக்கப்பட்டனர்.

இந்த நிலையில் நேற்றுத் திங்கட்கிழமை காலை குறித்த கைக்குண்டு மீட்கப்பட்ட இடத்துக்கு அருகிலுள்ள வீடுகளில் பொலிஸார், படையினர் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இதேவேளை, கைக்குண்டு மீட்கப்பட்ட வீட்டுக்கு அண்மையிலுள்ள வீட்டின் மீது கடந்த 15 ஆம் திகதி திங்கட்கிழமை இரவு இனந்தெரியாதோரால் குண்டு வீச்சு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது குறிப்பிடத்தக்கது. (எ)

# இலவச மருத்துவ முகாம்




நற்பிட்டிமுனை, ஜூலை 23

நற்பிட்டிமுனை சமூக சேவைகள் மற்றும் அபிவிருத்திக்கான ஒன்றிய சுகாதார பிரிவு ஏற்பாடு செய்த இலவச மருத்துவ முகாம் நற்பிட்டிமுனை அல் அக்ஸா மத்திய மகா வித்தியாலய அஹமட் மண்டப கேட்போர் கூடத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

நற்பிட்டிமுனை சமூக சேவைகள் மற்றும் அபிவிருத்திக்கான ஒன்றியத்தின் தலைவர் ஐ. எல். ஏ. குத்தூஸ் தலைமையில் நடைபெற்ற இலவச மருத்துவ முகாமில் தொற்றா நோய்களான நீரிழிவு, புற்றுநோய், மாரடைப்பு, உயர் குருதியமுக்கம் போன்ற நோய்களுக்கான பரிசோதனைகள் நடைபெற்றன. இன்று எமது சமூகத்தில் தொற்றா நோய்களான நீரிழிவு, புற்று நோய் மாரடைப்பு, உயர் குருதியமுக்கம் போன்றன இளம் வயதிலேயே பொதுமக்களை கொல்லும் நோய்களாக காணப்படுகின்றன. ஆகவே, ஆரம்பத்திலேயே இந்த நோய்களை கண்டுபிடிப்பதன் மூலம் பாதிப்புகளை குறைக்க முடியும்.

இதனடிப்படையில் இலவச மருத்துவ முகாமில் இரத்தத்தில் சீனி, இரத்த அழுத்த பரிசோதனை, உடல் நிறை குறியீட்டெண் மற்றும் மருத்துவ ஆலோசனைகள் வழங்கப்பட்டதுடன் மருத்துவ அதிகாரிகளான எஸ். அஜ்மல் இம்தியாஸ், எம். ஏ. பயாஸ், பொதுச் சுகாதார பரிசோதகர் எம். நிஜாமுதின் அத்துடன் குடும்ப சுகாதார உத்தியோகத்தர்களான ரி. எஸ். சாஹிரா எஸ். ஜீவானந்தி ஆகியோரின் பங்குபற்றுதலுடன் நடைபெற்றது

இந்த இலவச மருத்துவ முகாமில் பொது மக்கள் பலரும் கலந்து கொண்டனர். (எ)

# மாவடி சிறீ கந்தசுவாமி ஆலயத்தின் ஆடிவேல் திருவிழா தீர்த்தோற்சவம்

காரைதீவு, ஜூலை 23

அம்பாறை, காரைதீவு மாவடி சிறீ கந்தசுவாமி ஆலய வருடாந்த ஆடிவேல் பெருந்திருவிழா தீர்த்தோற்சவம் நேற்று திங்கட்கிழமை சிறப்பாக நடைபெற்றது.

கடந்த 6 ஆம் திகதி கொடியேற்றத்துடன் தொடங்கிய இந்தத் திருவிழா தினமும் பகல் இரவு என இரண்டு வேளை வசந்தமண்டப பூஜையும் சுவாமி உள்வீதி வெளிவீதி வருதலும் நடைபெற்று வந்தது.

நேற்று முருகப் பெருமான் காவடி சகிதம் ஊர்வலமாக வந்து சமுத்திர தீர்த்தத் திருவிழா சிறப்பாக நடைபெற்றது. (எ)







# உலக குருதி கொடையாளர் தினத்தில் குருதி கொடையாளர்கள் கௌரவிப்பு





கல்முனை, ஜூலை 23

உலக குருதி கொடையாளர் தினத்தை சிறப்பிக்கும் வகையில் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த மருத்துவமனையின் ஏற்பாட்டில் இரத்த தானம் வழங்கியவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த மருத்துவ மனையில் நடைபெற்றது.

கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த மருத்துவமனையின் அத்தியட்சகர் ஏ. எல். எப். ரஹ்மானின் வழிகாட்டலில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த மருத்துவமனையின் பொதுச் சுகாதாரம் மற்றும் திட்டமிடலுக்கு பொறுப்பான சிரேஷ்ட மருத்துவ அதிகாரி ஏ. எல். பாறூக் கலந்து கொண்டதுடன் குருதிக் கொடை ஏற்பாட்டாளர்கள் சார்பில் கௌரவ விருந்தினராக அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் அம்பாறை மாவட்ட இளைஞர் அமைப்பாளரும் மயோன் குரூப் நிறுவனத்தின் பணிப்பாளருமான றிஸ்லி முஸ்தபா, மருத்துவர்கள், தாதியர்கள், குருதிக் கொடையாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ)

### மாமனார் படுகொலை

# தலைமறைவான மருமகன் உட்பட ஐந்து பேர் பொலிஸாரால் கைது!

சாய்ந்தமருது, ஜூலை 23

தனது மாமனாரை அடித்துப் படுகொலை செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்ட பிரதான சந்தேக நபர் உட்பட ஐந்து பேர் தலைமறைவாகி இருந்த நிலையில் ஞாயிற்றுக்கிழமை இரவு கைது செய்யப்பட்டுள்ளனர்.


அம்பாறை, சாய்ந்தமருது பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொலிவேரியன் கிராமத்தில் உள்ள வீடு ஒன்றில் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றதுடன் குறித்த சம்பவத்தில் 62 வயது மீராசாஹிப் சின்னராசா என்பவர் உயிரிழந்தார்.

மாமனாரை தாக்கி படுகொலை செய்ததாக குற்றஞ்சாட்டப்பட்ட பிரதான சந்தேக நபர் மட்டக்களப்பு, வாழைச்சேனை பகுதியில் இருந்தும் ஏனைய நான்கு சந்தேக நபர்கள் சாய்ந்தமருது பகுதியில் இருந்தும் கைது செய்யப்பட்டிருந்தனர்.

மேலும், கைதான 33 வயது பிரதான சந்தேக நபர் உட்பட குறித்த கொலைச் சம்பவத்துக்கு உடந்தையாக செயல்பட்டனர் என்று குற்றஞ்சாட்டப்பட்ட 18 முதல் 20 வயதுக்குட்பட்ட ஏனைய சந்தேக நபர்களை சட்ட நடவடிக்கைக்காக கல்முனை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க ஜனாதிபதி வேட்பாளராக கமலா ஹாரிஸுக்கு பைடன் ஆதரவு



வாஷிங்டன், ஜூலை 23


**அமெரிக்காவின் துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸை ஜனநாயக கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்த ஜனாதிபதி ஜோ பைடன் ஆதரவு தெரிவித்துள்ளார்.**

எதிர்வரும் நவம்பர் மாதம் அமெரிக்காவில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது. இதில் ஜனநாயக கட்சி சார்பில் வேட்பாளராக தற்போதைய ஜனாதிபதி ஜோ பைடன் அறிவிக்கப்பட்டார். அவர் பரப்புரை மேற்கொண்டு வந்த நிலையில் ஜனாதிபதித் தேர்தலில் இருந்து விலகுவதாக ஞாயிற்றுக்கிழமை உத்தியோகபூர்வமாக அறிவித்தார்.

இந்தச் சூழலில் தற்போது அமெரிக்க துணை ஜனாதிபதியாகவுள்ள கமலா ஹாரிஸ், ஜனநாயக கட்சி வேட்பாளராக நிறுத்தப்பட வேண்டுமென ஆதரவு கோரப்பட்டு வருகிறது. அவரது ஆதரவாளர்கள் கட்சி உறுப்பினர்களிடம் இது தொடர்பில் பேசி வருகின்றனர். குறிப்பாக அவருக்கு யாரும் போட்டியாக களம் காணாத வகையில் நகர்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இது தொடர்பில் ஞாயிற்றுக்கிழமை மதியம் நடைபெற்ற ஜனநாயக கட்சி கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டது. அதில் பெரும்பாலானவர்கள் கமலா ஹாரிஸுக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர். அதே நேரத்தில் ஜனநாயக கட்சியின் வேட்பாளரை தேர்வு செய்து, அது குறித்த அறிவிப்பு முறைப்படி வெளியிடப்படும் என அந்தக் கட்சியின் தலைவர் ஹாரிசன் தெரிவித்தார். தேர்தலுக்கு இன்னும் நான்கு மாத காலம் உள்ள நிலையில் ஜனாதிபதி வேட்பாளர் தெரிவு வெளிப்படைத்தன்மையுடன் நடைபெறும் என அந்தக் கட்சி தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் அடுத்த மாதம் நடைபெறவுள்ள ஜனநாயக கட்சி மாநாட்டுக்கு முன்னதாக கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் அறிவிக்கப்படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

"அமெரிக்க மக்களின் சார்பாக ஜனாதிபதி ஜோ பைடனுக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். நாட்டுக்காக பல ஆண்டுகளாக சிறப்பான தலைமைப் பண்புடன் பைடன் பணியாற்றியுள்ளார். கட்சியின் வேட்பாளராக ஜனாதிபதி எனக்கு ஆதரவு தெரிவித்துள்ளார். அது எனக்கு கௌரவம் அளிக்கிறது. ஜனநாயக கட்சியின் வேட்பாளர் போட்டியில் நான் வெற்றி பெற விரும்புகிறேன். அதுவே எனது எண்ணமும் கூட. கட்சியையும், தேசத்தையும் ஒருங்கிணைத்து தேர்தலில் ட்ரம்பை வீழத்துவேன்" என்று கமலா ஹாரிஸ் தெரிவித்துள்ளார். (எ)




# "ஹீரோ ட்ரம்ப் உதவியுடன் அமெரிக்காவை மீட்போம்"

வாஷிங்டன், ஜூலை 22

"என்னுடைய ஹீரோ, கிளாடியேட்டர் ட்ரம்ப் உதவியுடன் அமெரிக்காவை மீட்போம். அவர் ஓர் உண்மையான அமெரிக்கர்" என்று புகழாரம் சூட்டியுள்ளார் மல்யுத்த வீரர் ஹல்க் ஹோகன்.

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மீது துப்பாக்கிச் சூடு தாக்குதல் நடத்தப்பட்டது. காதில் காயத்துடன் தப்பித்த அவர், அதன் பிறகு முதன்முறையாக மிலுவாக்கி நகரில் நடந்த குடியரசுக் கட்சி பொதுக்கூட்டத்தில் பங்கேற்றார். இந்த கூட்டத்தில் பிரபல மல்யுத்த வீரர் ஹல்க் ஹோகன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.

கூட்டத்தில் ஹல்க் ஹோகன் தெரிவித்தவை வருமாறு, "நம்முடைய தலைவர், என்னுடைய ஹீரோ, கிளாடியேட்டர் ட்ரம்ப் உதவியுடன் அமெரிக்காவை மீட்போம். அவர் ஓர் உண்மையான அமெரிக்கர். ஆனால் கடந்த வாரம் நடந்த சம்பவத்தில் என்னுடைய ஹீரோவை அவர்கள் கொல்ல முயற்சித்ததன் மூலம் அமெரிக்காவின் ஜனாதிபதியை அவர்கள் கொலை செய்ய துணிந்திருக்கின்றனர். ட்ரம்ப் மீண்டும் ஆட்சி செய்யட்டும், 'ட்ரம்ப் ஓ மேனியா' மீண்டும் அமெரிக்காவை சிறந்த நாடாக மாற்றட்டும்" என்று ஹல்க் ஹோகன் தெரிவித்தார்.



# கமலா ஹாரிஸை வீழ்த்துவது எளிது

## டொனால்ட் ட்ரம்ப் தெரிவிப்பு

வாஷிங்டன், ஜூலை 23

ஜனாதிபதித் தேர்தலில் கமலா ஹாரிஸ் போட்டியிட்டால் அவரை வீழ்த்தி வெற்றி பெறுவது எளிது என்று குடியரசுக் கட்சியின் வேட்பாளர் டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் இருந்து ஜனநாயக கட்சியின் வேட்பாளரும், தற்போதைய ஜனாதிபதியுமான ஜோ பைடன் விலகியுள்ளார்.

இது குறித்து அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ட்ரம்ப் தெரிவிக்கையில்,

துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸை தேர்தலில் வீழ்த்துவது எளிதாக இருக்கும் என நான் கருதுகின்றேன்- என்றார்.

# மாணவர்களின் போராட்டத்தால் 30 சதவீத இடஒதுக்கீடு இரத்து

## 151 பேர் உயிரிழந்த பின் வந்த உத்தரவு

டாக்கா, ஜூலை 23

பங்களாதேஷ் அரசு வேலை வாய்ப்புகளில் விடுதலை போராட்ட வீரர்களின் வாரிசுகளுக்கு வழங்கப்பட்ட 30 சதவீத இடஒதுக்கீட்டை இரத்துச் செய்து அந்த நாட்டு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அதேநேரம், விடுதலை போராட்ட வீரர்களின் வாரிசுகளுக்கான வேலை ஒதுக்கீட்டை 30 சதவீதத்தில் இருந்து 5 சதவீதமாக குறைக்குமாறு அரசுக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதாக பங்களாதேஷ் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. பங்களாதேஷில் மாணவர்களின் போராட்டம் தீவிரமடைந்ததால் இவ்வாறு தீர்ப்பு வழங்கப்பட்டது.

முன்னதாக, தீர்ப்பு வழங்கப்பட்ட உச்ச நீதிமன்ற வளாகத்துக்கு வெளியே இராணுவ டாங்கர் ஒன்று நிறுத்தப்பட்டிருந்தது. மேலும், தலைநகர் டாக்கா



முழுவதும் இராணுவக் குழுக்கள் குவிக்கப்பட்டன. மாணவர்கள் போராட்டத்தில் வன்முறை வெடித்ததால் 151 பேர் உயிரிழந்தனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அரசு வேலைவாய்ப்புகளில் இடஒதுக்கீடு தொடர்பாக சமீபத்தில் பங்களாதேஷ் உயர் நீதிமன்றம் பிறப்பித்த ஓர் உத்தரவு மாணவர்களைக் கிளர்ந்தெழச் செய்து வீதிகளில் இறங்கிப் போராடத் தூண்டியுள்ளது. கடந்த 1971ஆம் ஆண்டு விடுதலைப் போராட்டத்தில் உயிரிழந்த படைவீரர்களின் குடும்பத்தினருக்கு அரசு வேலைவாய்ப்புகளில் 30 சதவீதம் இடஒதுக்கீடு வழங்கப்பட்டு வந்தது. இடையில் இரத்துச் செய்யப்பட்டிருந்த இந்த இடஒதுக்கீட்டை மீண்டும் வழங்க வேண்டும் என்று உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது. நீதிமன்றத்தின் இந்த உத்தரவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஜூலை முதலாம் திகதி முதல் தொடர் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வந்தது.

# ஜனாதிபதித் தேர்தல்; ஜோ பைடன் விலகல்!

வாஷிங்டன், ஜூலை 23

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் இருந்து விலகுவதாக ஜனாதிபதி ஜோ பைடன் அறிவித்துள்ளார்.

81 வயதான பைடன், தனது பிரசாரத்தில் தடுமாற்றத்துடன் பேசி வந்தார். குடியரசு கட்சி வேட்பாளர், முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்புடன் நடந்த முதல் நேரடி விவாதத்தின் போதும் பைடன் தடுமாறினார். இது அவரது சொந்தக் கட்சியை சேர்ந்தவர்களையே அதிருப்தியடைய செய்தது. இதனால் அவர் ஜனாதிபதித் தேர்தல் போட்டியில் இருந்து விலக வேண்டுமென வலியுறுத்தப்பட்டு வந்தது.

இந்த நிலையில், தற்போது அவர் தேர்தலில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைத்தளப் பதிவில் தெரிவித்தவை வருமாறு,

"அமெரிக்க ஜனாதிபதியாக நான் பணியாற்றுவது எனது வாழ்நாளில் எனக்கு கிடைத்த மிகப்பெரிய கௌரவமாகும். மீண்டும் தேர்தலில் போட்டியிடுவது எனது நோக்கம். இருந்தாலும் நான் தேர்தலில் இருந்து விலகுகிறேன். எஞ்சியுள்ள எனது பதவிக்காலத்தை நிறைவேற்றுவதில் கவனம் செலுத்துவேன். இது ஜனநாயக கட்சி மற்றும் நாட்டின் நலன் சார்ந்து நான் எடுத்துள்ள முடிவு. இது குறித்து விரைவில் விரிவாக பேசுவேன்.

நான் மீண்டும் ஜனாதிபதியாக வேண்டும் என்று ஆதரவு தெரிவித்த அனைவருக்கும் இந்த நேரத்தில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். என் மீது அமெரிக்க மக்கள் வைத்த நம்பிக்கைக்கு நன்றி. என்னுடன் இணைந்து சிறப்பாக பணியாற்றிய துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸுக்கும் நன்றி.

கடந்த 2020 இல் ஜனநாயக கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக நான் அறிவிக்கப்பட்டதும் துணை ஜனாதிபதி வேட்பாளராக நான் தெரிவு செய்தது கமலா ஹாரிஸை தான். ஜனாதிபதித் தேர்தலில் இருந்து நான் தற்போது விலகியுள்ள நிலையில் இம்முறை ஜனநாயக கட்சியின் வேட்பாளராக அவருக்கு எனது முழு ஆதரவை வழங்க விரும்புகிறேன். நம் கட்சியினர் அனைவரும் ஒன்று கூடி ட்ரம்பை வீழ்த்த வேண்டும்" என பைடன் தெரிவித்தார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தலுக்கு அஞ்சும் நபர் அல்லர் ரணில்!

## ருவான் விஜேவர்தன கூறுகிறார்



கொழும்பு, ஜூலை 23

**“தனது வீட்டைக் கொளுத்தியபோதும் எதற்கும் அஞ்சாது நாட்டை பொறுப்பேற்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி தேர்தலுக்கு அஞ்சும் நபர் கிடையாது. தேர்தலெல்லாம் அவருக்கு ஒரு பொருட்டே அல்ல” - என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவரான ருவான் விஜேவர்தன தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேர்தலுக்கு அஞ்சுகின்றாராம், அதனால்தான் 22 ஆவது திருத்தச்சட்டமூலம் கொண்டு வரப்படுகின்றது என எதிரணிகள் பிரச்சாரம் முன்னெடுக்கின்றன.

நாட்டில் வரிசை யுகம் ஏற்பட்டு, மக்கள் வாழ முடியாத நிலை ஏற்பட்டபோது துணிவுடன் சவாலை எதிர்கொண்ட தலைவர்தான் ரணில் விக்கிரமசிங்க, அவரின் வீட்டை எரித்த போதுகூட விட்டு ஓடவில்லை. இவ்வாறு எதற்கும் அஞ்சாத ஜனாதிபதி ரணில், தேர்தலுக்கு அஞ்சுவாரா? தேர்தல் எல்லாம் அவருக்கு ஒரு பெரிய விடயமே அல்ல.

அதேவேளை, நாட்டின் நலன்கருதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் கரம் கோர்க்குமாறு ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுக்கின்றேன்-என்றார். (அ)

# அதிவேக வீதியில் விபத்து!



கொழும்பு, ஜூலை 23

தெற்கு அதிவேக வீதியில் 76 கிலோ மீற்றர் மைல்கல் அருகில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் காயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றுள்ளது.

கப் வாகனம் ஒன்று மாத்தறை நோக்கிப் பயணித்த லொறி ஒன்றின் பின்புறத்தில் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தின்போது கப் வாகனத்தில் பயணித்த இருவரில் ஒருவர் படுகாயமடைந்துள்ள நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

# 22 ஆவது திருத்தத்தை நிறைவேற்ற அரசுக்கு பெரும்பான்மை கிடையாது!

## விஜித ஹேரத் கூறுகின்றார்

கொழும்பு, ஜூலை 23

“22ஆவது அரசியலமைப்பு திருத்தச் சட்டத்தை நிறை வேற்றுவதற்கு அரசாங்கத்திற்கு மூன்றில் இரண்டு பெரும் பான்மை அதிகாரம் இல்லை” என தேசிய மக்கள் சக்தி யின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

கொட்டகலை பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

22ஆவது அரசியலமைப்பு திருத்தச் சட்டத்தை நிறைவேற்றுவதற்கு அரசாங்கத்திற்கு பாராளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை அதிகாரம் இல்லை.

தேர்தலை பிற்போடும் நடவடிக்கைகளில் ஒன்றாக ரணில் விக்கிரமசிங்க திடீரென 22ஆவது அரசியலமைப்பு திருத்த சட்டமூலத்தைக் கொண்டுவர முயற்சி செய்கின்றார்.

பெருந்தோட்ட மக்களின் வாக்குகளைப் பெற்றுக்கொண்ட எந்தவொரு ஆட்சியாளரும் தோட்டத் தொழிலாளர்களை பொருட்படுத்தவில்லை.

ஜீவன் தொண்டமானை அருகில் வைத்து தோட்டத் தொழிலாளர்களுக்கு 1700 ரூபா சம்பளம் வழங்கப்படும் என்றார். உள்ளது இன்று வரை கிடைக்காத நிலையில், இந்த ஆண்டும் அது கிடைப்பதற்கான அறிகுறியே இல்லை என, மீண்டும் மக்களை ஏமாற்றியுள்ளனர்.

தோட்டக் கம்பனிகளுக்கும் தோட்டத் தொழிலாளர்களுக்கும் இடையில் முரண்பாட்டை உருவாக்கி சம்பளத்தை அதிகரிக்கவில்லை என தோட்டக் கம்பனிகளை குற்றம் சாட்டுவதையே அரசாங்கம் செய்து வருகின்றது-என்றார்.

(அ)

# சஜித், அனுர ஆகியோரை தன்னுடன் இணையுமாறு கோருகின்றார் ரணில்

கொழும்பு, ஜூலை 23

அரசியல் நிகழ்ச்சி நிரல்களுக்கு ஏற்ப நாட்டின் எதிர்காலத்தை வடிவமைக்க தாம் ஒரு போதும் இடமளிக்கப் போவதில்லை எனவும், நாட்டின் நிகழ்ச்சி நிரலுக்கு அமையவே அரசியலை உருவாக்கவேண்டும் எனவும் வலியுறுத்திய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாச, அநுரகுமார திஸாநாயக்க ஆகியோரை இப் பயணத்தில் இணையுமாறு அழைப்பு விடுத்தார்.

‘ஒன்றாக வெல்வோம்-நாம் கம்பஹா’ என்ற தொனிப்பொருளில் நேற்று முன் தினம் கடவத்தை பஸ் நிலைய வளாகத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்நாட்டின் எதிர்காலத்தை அரசியல்வாதிகளின் நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாக கட்டமைக்க இடமளியேன். நாட்டின் தேவைக்கேற்ப அரசியல் வாதிகள் இசைந்து செல்ல வேண்டும். இல்லாவிட்டால் நாட்டின் எதிர்காலம் கேள்விக் குறியாகிவிடும்.

சிங்களவர்கள் என்று கூறிக் கொண்டு யாசகம் செய்வதில் பயனில்லை. பெருமிதம் உள்ள மனிதர்கள் என்றால் முன்னேறிச் செல்லவேண்டும். அதற்கான மாற்றத்தைச் செய்வோம்.

போலி வாக்குறுதிகளை வழங்குவதில் பயனில்லை. அதனால் சஜித், அனுரவை எம்மோடு இணைந்து முன்னோக்கிச் செல்ல வருமாறு அழைக்கிறேன். கம்பஹா இலங்கையின் இதயமாகும். டீ.எஸ்.சேனநாயக்க, ஜே.ஆர்.ஜயவர்தன போன்றவர்கள் இங்குதான் உருவாகினர்.

ஐக்கிய தேசிய கட்சியினரும் ஒன்றுபட்டு ஒற்றுமையாக செயற்பட முன்வாருங்கள். பண்டாரநாயக்கவும், டீ.எஸ். சேனநாயக்கவும் சுதந்திரத்துக்காக ஒற்றுமையாக செயற்பட்டனர்.

1971 ஆம் ஆண்டு கலவரத்தின் காலத்தில் சிறிமாவோ பண்டாராநாயக்கவுக்கு ஜே. ஆர்.ஜயவர்தனவுக்கு உதவி வழங்கினார். அதன் பின்னர் பிரேமதாசவின் காலத்திலும் சந்திரிகா பண்டாரநாயக்கவும் எமக்கு உதவி வழங்க முன்வந்தார். பாராளுமன்றத்தில் மோதினாலும் நாட்டைப் பாதுகாக்க அர்ப்பணித்திருக்கிறோம். சர்வஜன வாக்கெடுப்பின் பின்னர் ஜனநாயகத்தைப் பாதுகாத்திருக்கிறோம்.

ஆசியாவில் எந்த நாட்டுக்கும் அந்த பெருமை இல்லை. நாம் இதே பாதையில் முன்னோக்கி செல்ல வேண்டும். மீண்டும் வரிசை யுகத்திற்கு செல்ல முடியாது. நல்லதொரு எதிர்காலத்தை உருவாக்கி கொள்வோம். அழைப்புக்கு உரிய பதில் வழங்க வேண்டும். அதனை நேரம் வரும் போது கூறுவேன்-என்றார். (அ)

# ஒரு இலட்சம் தொழில் முனைவோரை நாட்டில் விரைவில் உருவாக்குவோம்!

## அமைச்சர் மனுஷ நாணயக்கார



கொழும்பு, ஜூலை 23

ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கத்தின் மீது நம்பிக்கை வைத்து புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் வங்கிகள் மூலம் முறையாக டொலர்களை அனுப்பி நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு பங்களிப்புச்செய்துள்ளனர் என தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

ஒரு இலட்சம் புலம்பெயர்ந்த தொழில் முயற்சியாளர்களை உருவாக்கும் தேசிய வேலைத் திட்டம் குருநாகல் வெலகெதர விளையாட்டரங்கில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தர்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டுக்கு புலம்பெயர்ந்த தொழிலாளர்களால் ”2016 இல் 7.2 பில்லியன் டொலர்கள், 2018 இல் 7.1 பில்லியன் டொலர்கள், 2019 இல் 6.7பில்லியன் டொலர்கள் மற்றும் 2020 இல் 7.1 பில்லியன் டொலர்கள் அனுப்பப்பட்டுள்ளன.

2021 ஆண்டு 5.4 பில்லியன் டொலராகக் குறைந்து. இது மீண்டும் 2022 ம் ஆண்டில் 3.7 பில்லியனாகக் குறைவடைந்து நாட்டில் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியுடன் டொலர் நெருக்கடிக்கு முக்கிய காரணமாக அமைந்தது.

நான் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சை பெறுப்பேற்றதன் பின்னர் இராஜாங்க அமைச்சர் ஜகத் புஷ்பகுமார் மற்றும் எமது அமைச்சின் செயலாளர் ஆகியோர் இணைந்து புலம் பெயர்ந்த தொழிலாளர்களிடமி [illegible] கொண்டுவரும் இந்தப் பணியை முன்னெடுத்ததன் மூலம் 2022 ஆம் ஆண்டு 5.9 பில்லியன் டொலர்களாக உயர்த்த முடிந்தது.

2024 ம் அரையாண்டுக்குள் நாட்டிற்கு 12 பில்லியன்டொலர்கள் புலம்பெர்ந்த தொழிலாளர்கள் அனுப்பி வைத்ததன் மூலம் பாரிதொரு பங்களிப்பை வழங்கிவுள்ளனர்.

புலம்பர்ந்த தொழிலார் சமூகத்திடம் நாட்டுக்கு டொலர்களை அனுப்ப வேண்டாம், நாட்டை மீளக்கட்டியெழுப்ப முடியாது எனக்கூறிய படி வீதிக்கு ஊடகவியலாளர்களுடன் சில அரசியல் தலைவர்கள் வந்து நாட்டை வீழ்த்த வேண்டுமானால் டொலர்களை அனுப்புவதை நிறுத்துங்கள் என கூச்சலிட்டனர். எல்லாவற்றையும் தாண்டி அமைச்சரவையில் பல்வேறு காலகட்டங்களில் ஜனாதிபதி எமக்கு வழங்கிய அறிவுறுத்தல்களின்படி இந்தப் பணியை முன்னெடுத்ததன் மூலம் 12 பில்லியன் டொலர்களை இந்த நாட்டிற்குக் கொண்டு வந்து கையிருப்பை அதிகரித்து எரிபொருள், எரிவாயு, பால் மா போன்றவற்றை இந்த நாட்டுக்கு வழங்கியுள்ளோம். வெளிநாட்டில் உழைக்கும் சமூகம் என்ற வகையில், இன்று நாட்டைக் கட்டியெழுப்புவதில் அவர்களால் ஒரு அங்கமாக மாற முடிந்தது என்பதில் பெருமிதம்கொள்கின்றேன்-என்றார்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எரிவாயுவுக்கு...

பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

நுவரெலியா மாவட்டத்தின் ஹற்றன் மற்றும் பெருந்தோட்டங்களை அண்டியுள்ள சில பிரதேசங்களிலேயே லிற்ரோ எரிவாயுவுக்கு கடந்த மூன்று நாட்களாகத் தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிய வருகின்றது.

லிற்ரோ எரிவாயு விநியோகஸ்தர்கள் கடந்த ஒரு மாத காலமாக எரிவாயு சிலிண்டர்களை விற்பனையாளர்களுக்கு வழங்கவில்லை என்று கூறப்படுகின்றது. எரிவாயு சிலிண்டர்கள் கையிருப்பில் இல்லாததால் விற்பனை நிலையங்கள் பல மூடப்பட்டுள்ளன என்றும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவித்தன. (ஐ)

## நாட்டில்...

தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று திங்கட்கிழமை நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், நாட்டில் குழப்பத்தை தோற்றுவிக்கும் நோக்கிலேயே அரசாங்கம் அரசமைப்பின் 22ஆவது திருத்தத்தைக் கொண்டு வந்துள்ளது. 19ஆவது திருத்தத்தை நிறை வேற்றும் போது 83 (ஆ) பிரிவை திருத்த மறந்துவிட்டதாக அரசாங்கம் கூறுகிறது.

அரசாங்கத்தின் சதித் திட்டத்தை தோற்கடிப்பது நாட்டை நேசிக்கும் அனைவரின் பொறுப்பாகும் - என்றார். (ஐ)

## ஏழுகட்சிகள்...

இந்த உடன்படிக்கை கைச்சாத்திடும் நிகழ்வு யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கில் தமிழ் மக்கள் பொதுச் சபை செயல்பாட்டாளரும் யாழ். பல்கலைக்கழக அரசறிவியல் துறை தலைவருமான கே. ரி. கணேசலிங்கம் தலைமையில் நடந்தது.

இதில், ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியாக இயங்கும் தமிழீழ மக்கள் விடுதலை கழகத்தின் (புளொட்) தலைவர் த. சித்தார்த்தன், தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைவர் செல்வம் அடைக்கலநாதன், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் (ஈ. பி. ஆர். எல். எவ்) தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன், தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் ந. சிறீகாந்தா, ஜனநாயக போராளிகள் கட்சியின் தலைவர் சி. வேந்தன் ஆகியோரும் தமிழ் மக்கள் கூட்டணி தலைவர் க. வி. விக்னேஸ்வரன், தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் ஆகியோருடன் தமிழ் மக்கள் பொதுச் சபையின் பிரதிநிதிகள் சார்பில் ஏ. யதீந்திரா, ம. நிலாந்தன், ந. வசந்தராஜா, இ. விக்னேஸ்வரன், செல்வின் இரேனியல், அ. யோதிலிங்கம், கே. ரி. கணேசலிங்கம் ஆகியோர் ஒப்பமிட்டனர்.

மேலும், கடந்த காலங்களில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல்களில் தமிழ் மக்கள் எவருக்கு வாக்களித்தும் எந்தவித பயனும் இல்லை என தமிழ் கட்சிகளும் சிவில் சமூகத்தினரும் பல்வேறு குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளனர். இதனால், தமிழ் மக்களின் நிலைமையையும் தமிழ் மக்களின் பிரச்னைகள் - தேவைகளை வெளிப்படுத்தும் வகையில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எந்தவொரு சிங்கள வேட்பாளருக்கும் ஆதரவை வழங்காது தமிழர் தரப்பில் இருந்து பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதற்கான நடவடிக்கைகள் அண்மைக்காலமாக பொது அமைப்புகளினாலும் அரசியல் கட்சிகளாலும் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வந்தது. இந்தநிலையில், இரு தரப்பினருக்கு இடையிலும் பல்வேறு விடயங்களை உள்ளடக்கி ஒப்பந்தம் கைச்சாத்தாகியுள்ளது. இதைத் தொடர்ந்து பொது வேட்பாளர் தெரிவு உள்ளிட்ட ஏனைய விடயங்கள் தொடர்பில் அடுத்த கட்ட நடவடிக்கைகள் மிகத் தீவிரமாக முன்னெடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## மருந்தகத்தில்...

செய்யப்பட்ட மருந்தகம் ஒன்று இயங்கி வருகின்றது. இந்த நிலையிலேயே அந்த மருந்தகத்தின் உரிமையாளரின் உறவினர் ஒருவரின் மரணச் சடங்கு அங்கு நடத்தப்பட்டுள்ளது.

மருந்தகத்தில் இரு நாட்கள் சடலம் வைக்கப்பட்டிருந்ததாகவும் இதற்காக மருந்துகள் அங்கிருந்து வேறிடத்துக்கு மாற்றப்பட்டன. அத்துடன், குளிரூட்டியில் பேணப்பட வேண்டிய மருந்துகளும் அங்கிருந்து அகற்றப்பட்டிருந்தன என்று கூறப்படுகின்றது.

இந்த சம்பவம் தொடர்பில் உணவு கட்டுப்பாடு, சுகாதார அதிகாரிகள் குறித்த மருந்தகத்துக்கு சென்று விசாரணை நடத்தினர். எனினும், விசாரணை செய்த அதிகாரிகளுக்கு மேலிடத்தில் இருந்து அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டன என்று கூறப்பட்டது. (ஐ)

## அரசமைப்பின்...

தேர்தல் முடியும்வரை முன்மொழியப்பட்ட 22ஆவது அரசமைப்பு திருத்தம் பிரகடனப்படுத்தப்படாது என்று கூறினார். ஆனால், நீதி அமைச்சரின் கூற்றுக்கு மாறாக முன்மொழியப்பட்ட அரசமைப்பு திருத்தம் ஜனாதிபதியின் உத்தரவால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. ஜனாதிபதியின் நடவடிக்கைகள் அமைச்சரவையின் ஒற்றுமைக்கு பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

அரசமைப்பின் 22ஆவது திருத்தத்தை பாராளுமன்றத்தில் 25 ஆம் திகதியே சமர்ப்பிக்க முடியும். அரசமைப்பை திருத்துவதற்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவையாக உள்ளது. அது கிடைத்த 30 நாட்களுக்குள் சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும். சர்வசன வாக்கெடுப்புக்காக ஆயிரம் கோடி ரூபாய்க்கும் மேல் செலவாகும். இது ஒரு வீண் செலவாக அமையும்.

ஜனாதி பதித் தேர்தலை ஒத்தி வைக்க அரசாங்கம் ஆரம்பத்தில் இருந்தே முயற்சித்து வருகிறது. அதன் கடைசி ஆயுதமாக 22ஆவது திருத்தச் சட்டம் உள்ளது - என்றார். (ஐ)

## இனவாத...

மேலும், கடந்த காலங்களில் கல்வியறிவு இல்லாத ஒரு முட்டாள் கூட்டம், முஸ்லிம் சமூகத்தின் கலாசார மற்றும் மத உரிமைகளை தடுத்து தகனமா அடக்கமா என்ற விவகாரத்தில் முட்டாள்கள்போல் நடந்து கொண்டனர். கோவிட் மரணம் ஏற்பட்டால் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பதை உலக சுகாதார நிறுவனம் அறிவுறுத்தியிருந்தது.

கொரோனா காலத்தில் முஸ்லிம்களின் மத உரிமைகளை பறிக்கும் இனவாத நோக்கத்துடன் ஜனஸாக்களை எரித்தனர். உலக சுகாதார ஸ்தாபனத்தை பார்க்கிலும் புத்திசாலிகள் என்ற மமதையில் செயல்பட்டனர். இது அறிவில்லாத செயல்பாடாகும். ஜனாஸா எரிப்பு என்பது முட்டாள்களின் முட்டாள்தனமான தீர்மானமாகும். எமது நாட்டின் ஆட்சியாளர்கள் முஸ்லிம் மக்களை ஒடுக்கி, இனவாதத்தையும் மதவாதத்தையும் தலைதூக்கி செயற்பட அனுமதித்து, முட்டாள்கள் போல் தீர்மானங்களை எடுத்து, முட்டாள்தனமான நடந்து கொண்டனர்.

இதன் காரணமாக, எமது நாட்டில் தரமான சிறந்த கல்விக்கு முன்னுரிமை வழங்க வேண்டும். கல்வியின் மூலம் இனவாதம், மதவாதம், தீவிரவாதம் ஒழிக்கப்படும். சிங்கள சமூகமோ, தமிழ் சமூகமோ, முஸ்லிம் சமூகமோ, பர்கர்களோ, தீவிரவாதப் போக்கை கடைப்பிடிப்பார்களானால் அதற்கு நாம் எதிர்ப்பை தெரிவிக்க வேண்டும். எல்லா சமூகத்தையும், எல்லா மதத்தையும், எல்லா இனத்தையும் மதிக்கும் நாகரிகம் மிக்க குடிமக்களை உருவாக்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். (ஐ)

## தமிழ்த் தேசிய பொதுக்...

தமக்கென ஒரு மரபு வழித் தாயகத் தைக் கொண்ட, வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்து வடக்கு - கிழக்கு உள்ளடங்கலாக இலங்கைத் தீவில் வாழும் தேசிய இனம் என்ற அடிப்படையில், சுயநிர்ணய உரிமையை கொண்டவர்கள்.

அடிப்படையிலும் உச்சபட்ச தன்னாட்சியைக் கோருவதற்கான உரித்துடையவர்கள். அதனடிப்படையிலும் பன்னாட்டுச் சட்டங்களின் நீண்ட வரலாற்றையும் மிகச் செழிப்பான பண்பாட்டையும் கொண்ட தமிழ் மக்களின் தனித்துவமான தேசிய இருப்பை சிதைக்கும் நோக்கத்துடன், நிலப்பரப்பு ரீதியாகவும், பண்பாட்டு ரீதியாகவும், மதரீதியாகவும் என பல்வேறு வழிகளில் இலங்கைத்தீவில் இனவழிப்பு நடவடிக்கைகள் இலங்கை அரசால் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

தமிழ் மக்களின் நியாயமான உரிமைப் போராட்டம் தீவிரவாதமாகவும் பிரிவினைவாதமாகவும் பயங்கரவாதமாகவும் சித்திரிக்கப்பட்டு வருகின்றது.

ஈழத்தமிழர்கள் இலங்கைத் தீவில் ஒரு தேசிய இனமாக இருப்பதும், கேந் திர முக்கியத்துவம் மிக்க புவிசார் அமைவிடத்தை வாழ்விடமாகக் கொண்டிருப்பதும் அவர்களது பிரதான அரசியல் பலமாகும் என்னும் யதார்த்தத்தின் பின்னணியில்தான் தமிழ் மக்களின் அரசியல் உரிமைப் போராட்டம் முதலில் பிராந்தியமயப்பட்டது. பின்னர் அனைத்துலகமயப்பட்டது.

நடந்து முடிந்த உள்நாட்டுப் போரில் இனப்படுகொலை செய்யப்பட்ட மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தமிழ் மக்களின் விவகாரத்தில் சர்வதேச சமூகம் காட்டி வந்திருக்கின்ற கரிசனைகளை இலங்கை அரசு எந்தவிதத்திலும் பொருட்படுத்தவும் இல்லை ஆக்கபூர்வமான நடவடிக்கை எதனையும் எடுத்திருக்கவுமில்லை.

அதேநேரத்தில் முள்ளிவாய்க்காலின் பின்னரான கடந்த பதினைந்து ஆண்டுகளில், இலங்கைத் தீவின் தேசிய இனப் பிரச்சனைக்கு தீர்வு காணும் முகமாக தமிழ் மக்களிற்கு சமஉரிமையை வழங்கும் அரசியல் தீர்வு தொடர்பில் எந்தவொரு நகர்வுகளைக்கூட இதுவரை காலமும் முன்னெடுக்கவில்லை.

இனப்படுகொலைக்கு எதிரான நீதியுமின்றி, அரசியல் தீரவுமின்றி, ஒன்றுபட்ட அரசியல் தலைமைத்துவமும் இன்றி பாரபட்சங்களும், அடக்குமுறைகளும், அச்சுறுத்தல்களும், ஆக்கிரமிப்புக்களும். அழிப்புகளும், பிரித்தாளும் அரங்கேற்றப்பட்டுக்கொண்டிருக்கும் ஒரு அரசியல், பொருளாதார, இராணுவச் சூழலில் தந்திரங்களும் தமிழ் மக்களின் தேசிய இருப்பு கேள்விக்குள்ளாகி நிற்கின்றது.

இவ்வாறான வரலாற்று உண்மைகளின் அடிப்படையிலும், இதுகால வரையிலான அனுபவங்களின் அடிப் படையிலும், சிறீலங்காவின் 2024 அரசுத் தலைவர் தேர்தலைத் தமிழ் மக்கள் தரப்பில் செயல்முனைப்புடன் எதிர்கொள்ள வேண்டிய அரசியல் தேவையும் அவசியமும் எழுந்திருக்கின்றது.

இந்த யதார்த்தத்தின் பின்னணியில், தமிழ்த் தேசத்தின் மக்களை ஒன்றுபடுத்துவது என்னும் பிரதான நோக்கத்தோடு, எதிர்வரும் சிறீலங்காவின் அரசுத் தலைவர் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது என்று. தமிழ் தேசிய கட்சிகளும் தமிழ் மக்கள் பொதுச் சபையும் இணக்கம் கண்டுள்ளன.

அத்துடன், இதனை செயல்முனைப்புடன் கையாளும் நோக்கில், பொதுக் கட்டமைப்பு ஒன்றை உருவாக்குவதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கையை மேற்கொள்வதென்றும் முடிவைக் கொண்டுள்ளன.

இதன்பிரகாரம் இவ்வுடன்படிக்கையின் சம தரப்புக்கள் என்னும் வகையில், தமிழ்த் தேசிய கட்சிகள், தமிழ் மக்கள் பொதுச்சபை ஆகியவை பின்வரும் அடிப்படையில் புரிந்துணர்வு ஒன்றினை ஏற்படுத்திக்கொள்கின்றன.

தமிழ்த் தேசியக் கட்சிகள், தமிழ் மக்கள் பொதுச் சபை ஆகியவை இவ்வுடன்படிக்கையில் சம தரப்பினர் என்னும் வகையில், இரு தரப்பினரின் இணைவில், உருவாக்கப்படும் இக்கட்டமைப்பு "தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பு" என அழைக்கப்படும்.

இவ்வுடன்படிக்கையின் பிரகாரம் உருவாக்கப்படும் "தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பு" எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை. சிறிலங்காவின் அரசுத் தலைவரை தேர்வு செய்வதற்கான தேர்தல் என்ற அடிப்படையில் நிராகரித்து தமிழ் மக்களின் அபிலாசைகளை வெளிப்படுத்தும் தேர்தலாக கையாளும் வகையில் தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்துவதெனத் தீர்மானித்துள்ளது.

தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பானது தமிழ்ப் பொது வேட்பாளரைத் தேர்ந்தெடுத்தல், தேர்தல் விஞ்ஞாபனத்தைத் தயாரித்தல், நிதி தொடர்பான விடயங்கள். பரப்புரைகளை முன்னெடுத்தல் போன்ற, அனைத்து அவசியமான செயற்பாடுகளையும் முன்னெடுப்பதற்கும் நிர்வகிப்பதற்கு மான, துணைக் குழுக்களை தேவைக்கேற்ப உருவாக்கும் அதிகாரங்களை கொண்டிருக்கும்.

தமிழ்த் தேசிய பொதுக்கட்டமைப்பால் பொதுவேட்பாளரை நடவடிக்கைக்காக உருவாக்கப்படும் குறித்த துணைக் குழுக்கள் மற்றும் ஏனைய துணைக் கட்டமைப்புக்கள் அனைத்திலும் தமிழ்த் தேசியக் கட்சிகள். தமிழ் மக்கள் பொதுச் சபை ஆகியவை சமதரப்பாகப் பங்குபற்றும்.

தமிழ்ப் பொதுவேட்பாளராக நிறுத்தப்படுபவரும் அவருக்கான தேர்தல் சின்னமும் தமிழ்ப் பொது நிலைப்பாட்டுக்கான ஒரு குறியீடாக மட்டுமே கருதப்படுதல் வேண்டும்.

தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பானது பொது வேட்பாளராகத் தெரிந்தெடுக்கப்படுபவருடனும், அவர் எந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியின் சார்பில் உத்தியோகபூர்வமாக நிறுத்தப்படுகின்றாரோ அந்த நபருடனும் அந்தக் கட்சியுடனும் அவசியமானதும் உகந்ததுமான, உடன்படிக்கையைத் தனித்தனியே நிறைவேற்றிக்கொள்ள வேண்டும்.

தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள், தமிழ் மக்கள் பொதுச் சபை ஆகிய இரு தரப்பும். ஒரு பொதுக் கட்டமைப்பாக செயற்படுபவர்கள் என்னும் அடிப்படையில் கூட்டுப் பொறுப்புடையவர்கள் என்பதில் இணக்கம் காணப்படுவதுடன், வழிகாட்டல் நெறிமுறை ஒன்றை உருவாக்கிக் கொள்வது என்றும் இணக்கம் இதற்கான காணப்படுகின்றது.

தமிழ்த் தேசிய நிலைப்பாட்டில் உடன்பாடுள்ள ஏனைய கட்சிகள் தமிழ்ப் பொது வேட்பாளர் நிலைப்பாட்டை ஏற்றுக்கொண்டு, பொதுக் கட்டமைப்புடன் இணைந்து பயணிக்க முன்வரும் போது, அவர்களை உள்வாங்கிக் கொள்வதென்றும் இணக்கம் காணப்படுகின்றது.

தமிழ்த் தேசிய இனத்தின் நீண்டகால அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றும் குறிக்கோளுடன் தொடர்ந்து செயல்படுவதென இரு தரப்பும் மேலும் இணங்கிக் கொள்கின்றனர் என 09 புரிந்துணர்வுகள் அடங்கிய உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளன. (ஐ)

## காணாமல்...

கிளிநொச்சி மாவட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் 30 பேர் மாவட்ட செயலகத்தால் அழைக்கப்பட்டு இதற்கான பதிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

இதன்போது, இழப்பீட்டு பணியகத்தின் பணிப்பாளர் ஜே. கிருஷ்ணமூர்த்தி நேற்று மாவட்ட செயலகத்துக்கு சமுகமளித்திருந்தார். அவர் கருத்து வெளியிடுகையில், "இழப்பீட்டு பணியகத்தால் பொருளாதார நெருக்கடியில் உள்ள காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் 2 ஆயிரத்து 500 பேருக்கு இரண்டு இலட்சம் ரூபாயை வழங்கியுள்ளது. வெகுவிரைவில் ஏனையவர்களுக்கு வழங்கப்படும் - என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# வெளிநாட்டு கண்காணிப்பு அமைப்புகளும் களத்தில்!

## ஜனாதிபதித் தேர்தலை அவதானிப்பதற்கு

கொழும்பு, ஜூலை 23

**ஜனாதிபதித் தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கையில் சர்வதேச தேர்தல் கண்காணிப்பு அமைப்புகளும் ஈடுபடவுள்ளன என்று தெரியவருகின்றது.**

இதற்கமைய சார்க் மற்றும் பொதுநலவாய தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் இலங்கை வரவுள்ளன. ஐரோப்பிய தேர்தல் கண்காணிப்பு அமைப்பு வருமா என்பது பற்றி இன்னும் உறுதியான தகவல்கள் வெளியாகவில்லை.

அத்துடன், உள்நாட்டு தேர்தல் கண்காணிப்பு அமைப்புகளும் தற்போதிருந்தே தமது பணிகளை ஆரம்பித்துள்ளன. தேர்தல் திகதி அறிவிக்கப்பட்ட பின்னர் அவை முழு வீச்சுடன் களமிறங்கவுள்ளன.

அதேவேளை, ஜனாதிபதித் தேர்தலை நீதியாகவும், சுதந்திரமாகவும் நடத்துவதற்கு தேர்தல் ஆணைக்குழுவும் கண்காணிப்பாளர்களை நியமிக்கவுள்ளது. (அ)

## 2024 வாக்காளர் இடாப்பு இணையத்தில் வெளியீடு

கொழும்பு, ஜூலை 23

2024ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பு உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டுள்ளது.

வாக்காளர் இடாப்பு உறுதிப்படுத்தப்பட்டு, தேர்தல்கள் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளதாக தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்தார்.

தேவைக்கேற்ப வாக்காளர் இடாப்பை அச்சிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டார்.

இதனிடையே, இவ்வார இறுதிக்குள் ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்படும் என தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதி ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

தேர்தல் திகதி குறித்த உத்தியோகபூர்வ அறிவிப்பு இந்த வார இறுதிக்குள் வெளியிடப்படும் எனவும் அவர் கூறினார்.

இதேவேளை, தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கு இடையிலான விசேட சந்திப்பு நாளை புதன்கிழமை அல்லது வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் குறித்து இங்கு விசேட கவனம் செலுத்தப்படவுள்ளது. (அ)

## இலங்கை வருகிறார் எலான் மஸ்க்

கொழும்பு, ஜூலை 23

ஸ்பேஸ் எக்ஸ் நிறுவுனர் எலான் மஸ்க் எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் இலங்கைக்கு வரவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைத் தொலைத்தொடர்புகள் அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் மதுசங்க திஸாநாயக்கவை மேற்கோள்காட்டி இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் ஓர் அங்கமான ஸ்டார்லிங்க் இணையச் சேவையை இலங்கையில் ஆரம்பிப்பதற்கான ஆயத்தப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. இதற்காக 28 வருடங்கள் பழைமையான தொலைத்தொடர்புகள் சட்டத்திலும் அண்மையில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இந்தப் பணிகள் அனைத்தும் இம்மாத இறுதிக்குள் நிறைவுசெய்யப்பட்டு, அடுத்த மாத ஆரம்பத்தில் ஸ்டார்லிங்க் நிறுவனத்துடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறாயினும், எலான் மஸ்கின் இலங்கை விஜயம் தொடர்பாக அவரது தரப்பிலிருந்தோ அல்லது இலங்கையின் வெளிவிவகார அமைச்சிலிருந்தோ இதுவரையில் உத்தியோகபூர்வ அறிவிப்புகள் எவையும் வெளியாக்கப்படவில்லை. (அ)

## தேர்தலில் இலஞ்சம் வழங்கினால் ஒரு மில்லியன் ரூபாய் அபராதம்!

### நீதியமைச்சர் முன்வைத்த யோசனை

கொழும்பு, ஜூலை 23

தேர்தலின்போது இலஞ்சம் வழங்கும் குற்றத்துக்காக விதிக்கப்படும் அபராதத்தை 500 ரூபாவில் இருந்து ஒரு மில்லியன் ரூபாவாக அதிகரிக்க யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

குற்றவியல் சட்டக்கோவையில் திருத்தம் மேற்கொள்வதற்கான சட்டமூலத்தின் ஊடாக இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்த சட்டமூலம் நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவின் கையொப்பத்துடன் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

அதற்கமைய, தேர்தலின்போது இலஞ்சம் வழங்கும் குற்றத்துக்காக விதிக்கப்படும் அபராதம் 200 ரூபாவில் இருந்து 750,000 ரூபாவாக அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வாக்கெடுப்பின்போது அநாவசிய அழுத்தம் பிரயோகத்துக்கு விதிக்கப்பட்ட 500 ரூபா அபராதம் ஒரு இலட்சம் ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளது.

தேர்தலொன்றில் ஆள்மாறாட்டம் செய்யும் குற்றத்திற்காக இதுவரை 300 ரூபா மாத்திரமே அபராதமாக அறவிடப்பட்டது.

இதனை ஒரு இலட்சம் ரூபா வரை அதிகரிக்க சட்டமூலத்தில் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

தேர்தல் கணக்குகளை தவறவிடுவோருக்கு இதுவரை விதிக்கப்பட்ட 300 ரூபா அபராதம் ஒரு இலட்சம் ரூபா வரை அதிகரிக்கப்படவுள்ளது.

இதுதவிர பல்வேறு குற்றச்செயல்கள் தொடர்பிலும் இதுவரை விதிக்கப்பட்டு வந்த அபராதத்தையும் அதிகரிப்பதற்கு இந்த சட்டமூலத்தில் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. (அ)

## ஹிருணிகாவுக்கு பிணை!

கொழும்பு, ஜூலை 23

மூன்று ஆண்டுகள் கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிக்கா பிரேமச்சந்திரவுக்கு கொழும்பு மேல் நீதிமன்றத்தினால் நேற்று பிணை வழங்கப்பட்டுள்ளது.

இந்த பிணை கோரிக்கை மனு, கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி அமல் ரணராஜா முன்னிலையில் நேற்று பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டு மனுவிற்குட்பட்டு ஹிருணிக்கா பிரேமச்சந்திரவை பிணையில் விடுவிக்க நீதிபதி நேற்று உத்தரவிட்டார்.

50,000 ரூபா பெறுமதியான ரொக்கப்பிணையிலும் தலா 5 இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளிலும் செல்வதற்கு நீதிபதி உத்தரவு பிறப்பித்துள்ளார்.

அத்துடன், அவருக்கு வெளிநாடு செல்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினராக செயற்பட்ட காலப்பகுதியில் ஹிருணிக்கா பிரேமச்சந்திரவின் பிரத்தியேக பாதுகாவலர்கள் சிலரால் 2015ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 21ஆம் திகதி அவருக்கு சொந்தமான டிபெண்டரில் அமில பியங்க அமரசிங்க எனும் இளைஞரை கடத்திச்சென்று தாக்குதல் நடத்தி காயப்படுத்தியதாக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டிருந்தது.

ஹிருணிக்கா பிரேமச்சந்திரவுக்கு எதிராக சட்டமாஅதிபரால் தாக்கல் செய்யப்பட்ட குற்றப்பத்திரிகையில் 18 குற்றச்சாட்டுகளில் அவர் குற்றவாளியென தீர்மானித்த கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி 33 வருடங்கள் சிறைத்தண்டனை விதித்ததுடன் அந்த சிறைத்தண்டனையை ஒரே தடவையில் 3 வருடங்களாக்கி உத்தரவிட்டிருந்தார்.

கடந்த ஜூன் 28ஆம் திகதி இந்த சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. (அ)

# காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு எதிராக மன்னாரில் பொது மக்கள் நேற்று போராட்டம்

மன்னார், ஜூலை 23

மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட இலுப்பைக்கடவை மற்றும் அந்தோனியார்புரம் பகுதியைச் சேர்ந்த ஏழை விவசாயிகள் தங்களுக்கான காணி உரிமையை கோரி நேற்று திங்கட்கிழமை மன்னார் மாவட்ட செயலகத்துக்கு முன்பாக அடையாள கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை மேற்கொண்டனர்.

மாந்தை மேற்கு பகுதியில் உள்ள சோழ மண்டலம் குளத்தின் கீழ் 30 வருடங்களுக்கு மேலாக அரசாங்க அனுமதியுடன் விவசாய செய்கையில் ஈடுபட்டிருந்த அந்தோனியார்புரத்தைச் சேர்ந்த மக்களுக்கு நபருக்கு தலா இரண்டு ஏக்கர் காணி வீதம் வழங்குவதாகவும் அதன் ஊடாக வாழ்வாதாரச் செயற்பாடுகளை முன்னெடுக்க உதவுவதாகவும் அரசாங்கத்தினால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இவ்வாக்குறுதியை அடிப்படையாக கொண்டு மக்கள் எந்த ஒரு காணி ஆவணங்களும் இன்றி பல வருடங்களாக அப்பகுதியில் வாழ்வாதாரச் செயற்பாடுகளை முன்னெடுத்து வந்தனர்.



இவ்வாறான நிலையில் கடந்த சில வாரங்களுக்கு முன்பாக குறித்த காணிகளை அந்தோனியார்புர மக்களுக்கு வழங்காது வெளிநாட்டை சேர்ந்த நபர் ஒருவர் உள்ளடங்கலாக வவுனியா, கொழும்பு பகுதிகளை சேர்ந்த செல்வந்தர்களுக்கு வழங்குவதற்காக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு குறித்த நபர்களால் காணிகளை பண்படுத்து செயற்பாடும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் தங்களுக்கு சொந்தமான காணியை தாங்கள் பூர்வீகமாக பயன்படுத்திய காணியை தங்களுக்கு வழங்காது வெளிநாட்டைச் சேர்ந்த நபர்களிடமும், பணம்படைத்தவர்களிடம் பணம் பெற்று கொண்டு காணி சீர்திருந்த ஆணைக்குழுவினர் வழங்குவதற்கு எதிர்ப்பு தெரிவித்து பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் போராட்டம் இடம்பெற்றது.

போராட்டத்தின் இறுதியில் பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றை மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் கனகேஸ்வரனிடம் போராட்டக்காரர்கள் கையளித்தனர்.

இவ்வாறான காணி தொடர்பான பிணக்குகளை நீண்ட நாட்கள் முடிவுறுத்தாமல் வைத்திருக்க முடியாது எனவும் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த மக்கள் பலருக்கு காணி இல்லாத நிலையில் வேறு மாவட்டத்தையும் வெளிநாட்டையும் சேர்ந்தவர்களுக்கு காணி வழங்குவதை ஏற்க முடியாது எனவும் அரசாங்க அதிபர் தெரிவித்தார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 23.07.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.